Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 08 செவ்வாய்க்கிழமை (20-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:85

# சமாதான சமிக்ஞைகளை வெளியிட்ட புலிகள் சாதகமான பதிலுக்குக் காத்திருக்கின்றனர்

## வன்னியில் சர்வமதக் குழுவிடம் போராளிகள் தெரிவிப்பு

வவுனியா,பெப்.20

போரை நிறுத்தி முழுமையான ஒரு சமாதானத்துக்கான சமிக்ஞைகளை வெளியிட்டு, உயிரோட்டமான செயற்பாட்டில் விடுதலைப் புலிகள் இறங்கியுள்ளனர். எனவே இவ்விடயம் குறித்து அரசுத் தரப்பிலிருந்து சரியான பதிலை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

- இவ்வாறு நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்ற சர்வமதக் குழுவிடம் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த சுதா தலைமையிலான குழுவினர் தெரிவித்தனர்.

சர்வமதக் குழுவில் தலல்லே தம்மாலோக தேரர், கம்புறுகமுவே வஜித தேரர் போன்ற முக்கிய பௌத்தபிக்குகளின் தலைமையில் 30 பிக்குகளும் 2 மௌலவிகளும் இரத்தினபுரி ஆயர் வண.மல்கம் றஞ்சித், மன்னார் ஆயர் வண. இராயப்பு யோசப் மற்றும் 2கத்தோலிக்க குருமார் ஆகியோரும் இடம்பெற்றனர்.

நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து பஸ் ஒன்றில் வன்னி நோக்கிப் பயணமான இவர்கள் மடுக் கோயிலைச் சென்றடைந்து அங்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளால் எடுத்துக் கூறப்பட்ட ஏனைய விடயங்கள் வருமாறு:-

'போர் என்றாலும் போர்' என்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தேடுதல்

கொழும்பு,பெப்.20

கொழும்பு நகரின் முக்கிய பகுதிகள் நேற்று முன்தினம் முதல் நேற்றுக் காலைவரை படையினரால் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கிராண்ட்பாஸ், கொட்டாஞ்சேனை மற்றும் கொச்சிக்கடை, புறக்கோட்டை, முகத்துவாரம் ஆகிய பகுதிகளிலே இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பகுதிகளில் உள்ள வீதிகளில் தற்காலிக வீதித்தடைகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும்-

எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் - தெரிவிக்கப்பட்டது. (உ-7)

# பிரிட்டனுக்கு அச்சுறுத்தலாக இயங்கும் அமைப்புகளுக்கே தடை விதிக்கப்படும்

## புதிய சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் அந்நாட்டு உள்துறை அமைச்சர் அறிவிப்பு

லண்டன்,பெப்ரவரி20

**பிரிட்டனுக்கு அச்சுறுத்தலாகச் செயற்படும் பயங்கரவாத அமைப்புகள் மட்டுமே புதிய - பயங்கரவாதத் தடுப்பு - சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட இயக்கங்களாக அறிவிக்கப்படும்.**

**- இப்படித் தெரிவித்திருக்கின்றார் பிரிட்டனின் உள்துறை அமைச்சர் ஜக் ஸ்ட்ரோ.**

புதிய வடிவத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பிரிட்டனில் நேற்று நடைமுறைக்கு வந்தது.

அதுபற்றிய பிரகடனத்தை உள்துறை அமைச்சர் ஸ்ரோ நாடாளுமன்றத்தில் (கீழ்ச்சபையில் ) வெளியிட்டு புதிய சட்டம் குறித்து பிரிட்டிஷ் எம்.பிக்களுக்கு விளக்கினர். பின்னர் அங்கு நடைபெற்ற விவாதத்தில் பங்குபற்றி எம்பிக்களின் கேள்விகளுக்கு அவர் விளக்கமளித்தார்.

நியாயமான உரிமைக்காக - நீதியாகப் போராடும் இயக்கங்களைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தடை செய்யப்படும் இயக்கங்களின் விவரப்பட்டியல் வெளியிடப்படவில்லை

லண்டன்,பெப்.20

கடந்த வருடம் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நேற்று முதல் அந்த நாட்டில் நடைமுறைக்கு வந்தது.

எனினும் இந்தச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்படக்கூடிய தீவிரவாத அமைப்புக்களின் பட்டியல் எதனையும் அந்தச் சட்டத்தின் கீழ் அதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கும உள்துறை அமைச்சர் வெளியிடவில்லை.

இந்தச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்படும் - பிற நாடுகளின் - தீவிரவாத அமைப்புக்களின் பெயர் விவரங்களை அவர் நாடாளுமன்றத்தில் அறிவிப்பார் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அது தொடர்பாக எந்த விதப் பட்டியலையும் உள்துறை அமைச்சர் வெளியிடவில்லை.

எனினும் புதிதாக அமுல் செய்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு உடன்படிக்கை விவகாரம்:

# இந்தியத் தூதுவர் காந்தி புதுடில்லிக்கு விரைவு

கொழும்பு,பெப்.20

உத்தேச புரிந்துணர்வு உடன்படிக்கையை கண்காணிக்க நியமிக்கப்படக் கூடிய சர்வதேசக் கண்காணிப்புக் குழு தொடர்பாக இந்தியத் தரப்பு விதித்துள்ள நிபந்தனை காரணமாக எழுந்துள்ள நெருக்கடி குறித்து உயர்மட்ட அதிகாரிகளுடன கலந்துரையாடுவதற்காக கொழும்புக்கான இந்தியத் தூதர் கோபால கிருஷ்ணகாந்தி நேற்றுத் திடீரென டில்லி புறப்பட்டுச் சென்றார்.

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் முன்முயற்சியாக நோர்வேத் தரப்பு முன்வைத்துள்ள புரிந்துணர்வு உடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் திட்டமிட்டபடி இன்று 'பொங்கு தமிழ்'

மட்டக்களப்பு,பெப்.20

கிழக்கு பல்கலைக்கழச் சமூகம் ஏற்பாடு செய்துள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு திட்டமிட்டபடி வந்தாறுமூலையில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளன.

இதனையொட்டி நேற்று முழு நாளும் பல்கலைக்கழக மைதானத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகளைக் கட்டுவதிலும் பல்வேறு பதாகைகளைக் கட்டுவதிலும் மாணவர்கள் ஈடுபட்டிருந்தனர் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.(உ-7)

## கிழக்கில் நடக்கும் 'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு ஆதரவாக

# யாழ்.பல்கலை மாணவர்கள் இன்று தீபமேற்றி உணர்வை வெளிப்படுத்துவர்

யாழ்ப்பாணம்,பெப்.20

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் இன்று இடம்பெறும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.பல்கலைக்கழகத்திலும் இன்று எழுச்சி நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

இன்று நண்பகல் 12.30 மணிக்கு சகல பீட மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்று கூடி தீபம் ஏற்றுவர்.

அரை மணி நேரம் அங்கு அமர்ந்து பிரார்த்தனையில் ஈடுபடுவர்.

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக மாணவர்களின் போராட்டத்தை ஆதரித்து யாழ்.பல்கலைக் கழகச் சமூகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களின் அபிலாஷையை "பொங்கு தமிழாக" உலகிற்கு எடுத்துரைக்க விழைவதையிட்டு பெரும் மகிழ்ச்சியும் உத்வேகமும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தடை செய்யக் கோரி

# 10 லட்சம் பேரின் ஒப்பத்துடன் சிஹல உறுமயவின் மகஜர்

## பிரிட்டிஷ் தூதரகத்தில் ஒப்படைப்பு

கொழும்பு,பெப்.20

விடுலைப் புலிகள் அமைப்பைப் பிரிட்டன் தடை செய்ய வேண்டும் என்று கோரி பத்து லட்சம் பேர் கையொப்பம் இட்ட மகஜரை சிஹல உறுமய நேற்றுக் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் ஒப்படைத்துள்ளது.

அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் சம்பிக ரணவக்க தலைமையில் புத்தபிக்குகள் அடங்கிய குழு ஒன்று இந்த மகஜரை நேரடியாகச் சென்று கையளித்தது.

விடுதலைப் புலிகள் இலங்கையில் பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பெரும் எண்ணிக்கையானவர்கள் மரணமாகக்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# IN MEMORY OF ORATOR

**A Commemorative meeting to mark the 7th Death Anniversary of**

**Mr. ORATOR C.SUBRAMANIAM**

Emertus Principal of Skandavarodaya College.

DATE : **20-02-2001 Tuesday 2.30 p.m.**
President : **Mr.K.Sivaji (Principal)**
Programme : **✪ Lighting of Traditional Lamp ✪ Principal Address**

✪ "ORATOR & SKANDA" By. Mr. S.Gnanachandramoorthy (Former tutorial Staff, Skanda)

Memorial Address : "EDUCATION AND HUMAN PERSONALITY"
**By Dr.C.S.NACHINARKINIYAN,** M.B.B.S. (Cey.), D.P.H. (Sydney)
Lecturer Dept. of Community Medicine, Medical Faculty, University of Jaffna.

VOTE OF THANKS : Mr. Aru. Thirumurugan (Tutorial Staff, Skanda)

**ALL ARE WELCOME**

*Principal, Staff,*
*Old Students Association and School Development Society.*

**SKANDAVARODAYA COLLEGE,**
**Kandarodai - Chunnakam.**

(C/15379)

# வாழ்த்தி மகிழ்கின்றோம்

## திருவாளர் சுப்பிரமணியம் திசநாயகம்பிள்ளை

(ஆசிரிய ஆலோசகர், தீவக வலயம் - வேலணை)

அவர்கள் கலைப்பட்டதாரியும், கல்வி டிப்ளோமா தேசியக் கல்வி நிறுவனம், மகரகம, கொழும்பு, ஆசிரிய ஆலோசகர் தீவக கல்வி வலயம், இலங்கை செஞ்சிலுவைச்சங்கக் கிளை வேலணைப் பிரிவுத் தலைவரும், வேலணை வங்களாவடி முருகன் ஆலய பரிபாலன சபை உறுப்பினரும், வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமாகிய **திரு.சுப்பிரமணியம் திசநாயகம்பிள்ளை** அவர்கள் அண்மையில் யாழ்.மாவட்ட நீதிவான் திரு.ஆர்.ரி.விக்னராஜா முன்னிலை யில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அவரது சேவைகள் தொடர எல்லாம் வல்ல வேலணை வங்களாவடி முருகப்பெருமானின் அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**- வேலணை வங்களாவடி முருகன் ஆலய திருப்பணிச்சபையினர்.**

(84380)

# அறிவித்தல்

18-02-2001 உதயன் பத்திரிகை பக்கம் 4 இல் வெளியிடப்பட்டிருந்த "நன்றி நல்கி ஆசிபெறுகிறேன்" எனும் தலைப்பில் நா.பாலசுப்பிரமணியக் குருக்கள் முதலோரால் கொடுத்த தகவலில் குறிப்பிட்ட 24, சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்பதில் அவர்கள் கூறிய நாகேந்திரபீடம் என்பது இல்லை என்பதையும், குறிப்பிட்ட அவ்விலாசத்தில் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில் உள்ளது. அக்கோயிலின் தெற்கு எல்லையுடன் என்னால் அமைக்கப்பட்ட வீடு (பொன்னாலயம்) மட்டும் உள்ளது என்பதை இத்தால் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

**திருமதி நவமணி செல்வராஜா**
மன்றினால் அங்கீகரிக்கப்பட்ட பரம்பரை தர்மகர்த்தா.

(84382)

துன்னாலை

## கோவிற்கடவை விநாயகர் ஆலயம்

**சிவராத்திரி நிகழ்வுகள்**

இரவு 9.00 **N.K.பத்மநாதன்**
**V.K.கானமூர்த்தி**
**L.S.ஜெகநாதன்**
**N.நித்தியானந்தன்**

ஆகியோரின் தவில் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும். தொடர்ந்து வில்லிசை, வழக்காடு மன்றம் இடம்பெற்று மின்னொளி அலங்காரக் கட்டுச் சப்பரத்தில் எம்பெருமான் திரு வீதி உலா வருவார் என்பதை அறியத்தருகின்றனர்.

**- நிர்வாகத்தினர்.**

(84375)

# இதய அஞ்சலி

எமது சக நண்பன்

**செல்வன் பிரியந்தாவினுடைய** அன்புத் தந்தையார்

**வைத்திய அதிகாரி க.பாலசிங்கம்**

அவர்கள் 15.02.2001 அன்று காலமானதால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**- A/L 2001 நண்பர்கள்.**

(84390)

## பாமாலை வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.20

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பன்னிரு திருமுறை தோத்திரப் பாமாலை ஒன்றைத் தொகுத்து வெளியிடுகின்றது.

இந்த வெளியீட்டு நிகழ்வு நாளை புதன்கிழமை இரவு 7 மணியளவில் கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து யாழ்.சத்திரத்துச் சந்தியில் உள்ள ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் பரிபாலன சபைத் தலைவர் கு.கங்கைவேணியன் தலைமையில் நூல் அறிமுக விழா நடைபெறும். (உ-7)

## சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களும் விழிப்புணர்வுக் குழுவினரும் இணைந்து நடத்தும் சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை காலை 9.00 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வட்டுக்கோட்டை தொழிநுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மனித முன்னேற்ற நடு நிலையத்தின் ஆதரவுடன் நடத்தப்படும் இக்கருத்தரங்கில் யாழ். மாவட்டப் பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 90 மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-5)

## கூடைப்பந்தாட்டப் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.20

அகில இலங்கைக் கூடைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் தேசிய ரீதியில் நடத்தப்படவுள்ள கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் யாழ்.அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களை இன்று தவறாது சமுகந்தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## செஞ்சிலுவை கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.20

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த திருமதி வீரசிங்கம் பரமேஸ்வரி (இடைக்குறிச்சி, வரணி), பற்றிக் கருணாகரன் (கச்சாய் வீதி, சாவகச்சேரி) ஆகியோரைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-7)

**லஷ்சுமி** இணுவில்
**பிரசாந்த், லைலா,** நடித்த
**பார்த்தேன் ரசித்தேன்**
(டீலக்ஸ்) காட்சிகள்:11.00, 2.30(பி.நே.)
21.02.2001 முதல்
உன்னைக்கொடு என்னைத் தருவேன்
(84387)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று மட்டும்
**பிரபுதேவா,சரத்குமார்**
ஜெயாசீல் நடித்த
**பெண்ணின் மனதைத்தொட்டு** (டீலக்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
நாளை முதல்
**காதலர் தினம்**
(84389)

**ராஜா** யாழ்ப்பாணம்
கார்த்திக், திவ்யாஉன்னி, ரஞ்சித், மந்த்ரா மற்றும் பலர் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
**கண்ணன் வருவான்**
காட்சிகள்: 10.30, 2.30 (பி.நே.)
(C/15311)

# வாழ்த்துகின்றோம்



**திரு.செல்லத்துரை பரமசிவம்பிள்ளை**
J.P., D.A.M.

D.A.M. வைத்தியர்கள் சங்கத் தலைவரும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை சித்த ஆயுர்வேத வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியுமான, இவர் சமாதான நீதிவானாக பதவியேற்றதையிட்டு எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.*

**D.A.M. வைத்தியர்கள் சங்கத்தினர்.**

(84371)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*பாவையூர் தந்த சமூக எழுச்சித் தந்தை*

**திரு.இ.மு.நாகலிங்கம்** அவர்கள்

(சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் ஸ்தாபகர் - போஷகர்)
(புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் ஸ்தாபகர் - தலைவர்)

அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு பெருமகிழ்வுடன் பாராட்டுகின்றோம்.

பின்தங்கிய சமூகங்களிடையே கல்வியில், ஒழுக்கத்தில், பொருளாதாரத்தில் எழுச்சியை ஏற்படுத்துவதன் மூலம், ஏற்றத்தாழ்வற்ற பலம் வாய்ந்த தமிழ் சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் தங்கள் இலட்சியப் பணி வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.

நன்றி

**- அராலி அறிவொளி சமூக முன்னேற்றக் கழகம்.**

(84373)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/துணைவி அ.மி.த.க. பாடசாலையின்
கட்டட வேலைக்குப் பன்முகப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ரூபா 200,000 நிதி உதவி வழங்கிய
வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சராகிய

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

மற்றும்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

**திரு.வி.கே.ஜகேந்திரன் (ஜெகன்)**

மற்றும்

வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவரும்
ஈ.பி.டி.பி. வட்டுக்கோட்டை அமைப்பாளருமான

**திரு.ந.திரிலோகநாதன்**

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்.**

(C/15381)

# அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம்

என்றும் மக்கள் மனதில்
அவனியில் ஆவதற்கு இணைப்புகள் ஈந்தவர்
உண்மையை ஊக்கத்தை என்றும் ஏற்றவர்
ஒறேற்றர் ஓயாத ஐயமில்லாத ஔடதம்
ஸ்கந்தா சுப்பிரமணியனை
மாபெரும் அறிதலை நிர்வாகியை ஏற்று
அன்னார் வரலாற்றை வெளிக் கொணரும்
அனைவருக்கும் நன்றி!

*207, கே.கே.எஸ். வீதி,*
*சுன்னாகம்.*

**- சேது விபுலானந்தா.**

**எது இன்று உனது அது நாளை அவரது**
**மறுநாள் வேறொருவரது.**

(C/15378)

# உதயன்

## சம்பள உயர்வு...

தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்குவது குறித்து நினைத்துப் பார்க்கும் நிலையில் கூட அரசாங்கம் இப்போது இல்லை என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்கா தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் பொருளாதாரம் மிகவும் நெருக்கடியான நிலையில் உள்ளது. அதனால் சம்பள உயர்வு குறித்து யோசிப்பதே கஷ்டமான காரியம் — என்பது, தம்மைச் சந்தித்த முன்னாள் அமைச்சர் பி. பி. தேவராஜ் தலைமையில் சென்ற தூதுக்குழுவுக்கு பிரதமர் தெரிவித்த விளக்கம்.

நாடு எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு பொருளாதாரத்தில் நிலையான தன்மையை உருவாக்குவதில் அரசாங்கம் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறது. அதனால் இப்போதைக்குச் சம்பள அதிகரிப்பு எதனையும் வழங்க முடியாது என்ற அர்த்தம் அவரது பதிலில் — கருத்தில் — தொனிக்கிறது.

நாட்டின் பொருளாதாரமும், நிதி நிலைமையும் படுமோசமாகியுள்ள நிலையில் எவருக்குமே சம்பள உயர்வு கொடுக்க இயலாத கஷ்ட நிலைக்குள் அரசு தள்ளப்பட்டிருக்கிறது என்பது தெரிந்ததுதான்.

இத்தளவு கேவலமான நிலைக்குப் போர்ச் செலவுகளே காரணம் என்பது மிகவும் வெளிப்படையானது. ஆனால் அரசாங்கத் தலைவர்களோ, போர் நடைபெற்ற போதிலும் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டு வருகிறது என்று வாய் கூசாமல் கூறி வருகிறார்கள்! உள்நாட்டில் நடைபெறும் மாநாடுகள், கூட்டங்களில் மட்டுமன்றி, வெளிநாடுகளில் நடைபெறும் மாநாடுகளிலும், அரசின் பிரசார நடவடிக்கைகளிலும் போரினால் நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டு விடவில்லை என்ற கருத்தே ஒலிக்கப்படுகிறது.

ஆனால பிரதமர் கூறுவது அதற்கு மாறாக உள்ளது. எனினும் அவர் போரினாலேயே இந்தத் தாக்கம், பாதிப்பு, நெருக்கடி தோன்றியுள்ளது என்பதனை நேரடியாகவன்றி மறைமுகமாகவே கூறியுள்ளார்.

இதே பிரதமர், போரைத் தொடர்ந்து நடத்தி, விடுதலைப் புலிகளை அழித்து — அல்லது தோற்கடித்து — இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்று கனல் கக்கப் பேசி வருகிறார். தொகுதிக்கு நூறு இளைஞர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்காக யாத்திரைகளும் நடத்தி வருகிறார்.

தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கினால் போர் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. தமிழர்கள் எப்போதுமே சிங்கள மக்களின் அரசியல் உரிமைகளைத் தட்டிப் பறிக்க விரும்பியவர்கள் அல்லர். தமக்குரிய உரிமைகளை வழங்குமாறே அவர்கள் கேட்கிறார்கள். அதற்காகவே போராடவும் செய்கிறார்கள்.

பொருளாதார நாசத்தின் மத்தியிலும், போரைத் தொடர வேண்டும் என்று பிரதமரும், அரசாங்கத் தரப்பினரும் விரும்புவது — அதற்காக மேன்மேலும் பணம் செலவிடுவது— ஒதுக்குவது என்பதுதான் அர்த்தம், தமிழர்களின் நியாயமான உரிமைகளை — சுயநிர்ணய உரிமை போன்ற அவர்களின் பிரிக்க முடியாத உரிமைகளை—வழங்குவதற்கு அரசாங்கம் விரும்பவில்லை என்பதே ஆகும்.

மக்களின் வாழ்க்கைச் சுமை நாளாந்தம் அதிகரித்து வரும் இக்காலத்தில், தோட்டத் தொழிலாளர் உட்பட சகல தரப்பினருக்கும் சம்பள உயர்வு வழங்குவது அரசின் பொறுப்பு.

# சமாதானப் பிரார்த்தனைக்கு இந்து நிறுவனங்கள் வரவேற்பு

யாழ்ப்பாணம், பெப். 20

சிவராத்திரித் தினத்தை இந்து சமயப் பேரவை சமாதானப் பிரார்த்தனை நாளாகப் பிரகடனப்படுத்தி இருப்பதை இந்து சமய நிறுவனங்கள் வெகுவாகப் பாராட்டி வரவேற்றுள்ளன.

நாட்டில் தொடர்ந்து நடைபெற்றுவரும் போர் ஓய்ந்து சமாதானமும், சுபீட்சமும், சகவாழ்வும் மிளிர வேண்டி சிவராத்திரித் தினத்தில் திரிகரண சுத்தியோடு அனைவரும் இறைவனைத் தியானிக்க வேண்டும் — என்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் ஒன்று ஏற்பட்டு நாட்டில் சாந்தியும், சமாதானமும், சுபீட்சமும் உண்டாக இப்புனித நாளில் அனைவரும் இந்துசமயப் பேரவையின் முயற்சியை ஆதரித்து பிரார்த்தனை செய்வோமாக—

என்று ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோயில் ஆதீன கர்த்தா கு. நகுலேஸ்வரக் குருக்கள் கூறி உள்ளார்.

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் —

கடந்த பல ஆண்டுகளாகத் தொடரும் போரால் நாடு பல சோதனைகளைக் கண்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் எமது மக்கள் சமாதானமாகவும், அமைதியாகவும் வாழ வேண்டி சிவராத்திரித் தினத்தன்று இந்துசமயப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமாதானப்பிரார்த்தனையை அனைவரும் தமது சூழலில் உள்ள ஆலயங்களில் மேற்கொள்ள வேண்டும்.

சிவாச்சாரியார்களும் இந்தப் பெரு முயற்சிக்குத் தமது பரிபூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்— என்றுள்ளது.

இதேவேளை—

சிவராத்திரித் தினமான நாளை புதன்கிழமை —

அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நடத்த உள்ள பேச்சுக்கள் திரிகரண சுத்தியோடு அமைய வேண்டும் என்றும் உண்மைச்சமாதானம் ஏற்பட வேண்டும் என்றும் பிரார்த்திப்போம் என்று இந்து சமயப் பேரவை நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# சென்னை ஹோட்டலில் வேலணை வாசி கொலை!

சென்னை, பெப். 20

சென்னை எழும்பூரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த இலங்கை வேலணையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை துரைசிங்கம் (ஏ.கே. ரி.) என்பவர் பணத்துக்காகக் கொலை செய்யப்பட்டு சென்னைக்கு வெளியே புதைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவரது சடலம் நேற்று முன்தினம் தோண்டியெடுக்கப்பட்டது.

லண்டனில் வசித்து வந்த துரைசிங்கம் சென்னை எழும்பூர் கென்னட் வீதியில் உள்ள மாசா ஹோட்டலில் கடந்த மாதம் 13 ஆம் திகதி அறை எடுத்துத் தங்கினார். அவரது குடும்பம் லண்டனில் வசித்து வருகின்றது. அவர் தமிழ் நாட்டில் உள்ள உறவினர்களைப் பார்த்து வரவும் வியாபார விடயங்களுக்காகவும் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வந்து செல்வது வழமை.

இம்முறை வந்த போது அவர் ஏராளமான அமெரிக்க டொலர்களையும் கொண்டு வந்திருந்தார் என்று தெரிய வருகிறது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி அவர் லண்டன் புறப்பட விமான டிக்கெட் வாங்கியிருந்தார்.

அவர் லண்டன் போய்ச் சேராததை அடுத்து மகன் சிவகுமார் சென்னை ஹோட்டலுடன் தொடர்பு கொண்டார் அதைத் தொடர்ந்தே அவர் கொலை செய்யப்பட்ட விடயம் தெரியவந்தது.

(க)

## மெய்வன்மைப் போட்டிகள்

வலி. வடக்கு, பெப். 20

குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ந. சிவகடாச்சம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளை கலந்து கொள்வார். (க-86)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று செவ்வாய் பிற்பகல் 1 மணிக்கு, அதிபர் திருமதி செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் கலந்து கொள்வார். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 20

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் க. அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-3)

## நாளை

மாசி 9

புதன்கிழமை

திதி: திரயோதசி

முற்பகல் 10.04 வரை.

நட்சத்திரம்: திருவோணம்

முன் இரவு 3.10 வரை.

மகாசிவராத்திரி விரதம்

சுபநேரம்: 5.01—6.31

ராகுகாலம்: 12.31—2.01

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# சிவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 20

உரும்பிராய், ஞானவைரவ சுவாமி கோயில் மகா சிவராத்திரி விழா நாளை நடைபெறும்.

உரையரங்கு, இசையரங்கு, இன்னிசை விருந்து, பக்திப் பாடல்கள், வில்லிசை என்பனவும் இடம்பெறும்.

(ம)

★ ★ ★

கோப்பாய் தெற்கு பழைய வீதி சுப்பிரமுனிய கோட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் — வீரபத்திரசுவாமி கோயிலடியில் உள்ள சாந்திலிங்கசுவாமி கோயில் மஹா சிவராத்திரி விழா நாளை புதன்கிழமை சிறப்பாக நடைபெறும்.

(ம)

★ ★ ★

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை சிவராத்திரி விழா நாளை கொண்டாடப்படவுள்ளது.

முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சோலை நிகழ்ச்சி உட்பட நாடகங்கள் மற்றும் பரிசளிப்பு விழா என்பனவும் இடம் பெறவுள்ளன.

(ம—86)

★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோவில் சிவராத்திரி விழா நாளை நடைபெறும்.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் சொற்பொழிவு, இன்னிசைக் கச்சேரி, தெய்வீக கானங்கள் என்பன இடம்பெறும்.

(ம—90)

★ ★ ★

வட்டுக்கோட்டை ஸ்ரீ சத்தியசாயி பஜனை நிலையத்தில் சிவராத்திரி விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

திருமதி ஏ. என். கிருஷ்ணவேணி யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் 'இந்துமதத்தில் சிவராத்திரி மகிமை' என்னும் பொருள் பற்றிச் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார்.

(ம)

★ ★ ★

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் நாளை சிவராத்திரி 4 சாம அபிஷேகபூசையும் 3 ஆம் சாம லிங்கோற்சவகால பூசையில் சுவாமி உள் வீதி வலம் வரும் நிகழ்வும் நடைபெறும்.

(ம)

★ ★ ★

வடமராட்சி கிழக்கு கலை கலாசார பேரவையினால், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் அனுசரணையுடன் சிவராத்திரி விழா இன்று கொண்டாடப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கு கலைஞர்களின் கலை நிகழ்சிகள், பாடசாலை மாணவர்கள் இடையிலான சமய அறிவுப் போட்டிகள், பட்டி மன்றம் ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (ம-182)

## உதயவாக்கு

சத்தியம், நிதானம், சகிப்புத் தன்மை ஆகிய மூன்றும் தான் அறிவை வளர்க்கின்றன.

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, பெப் 20

வலிகாமம் கல்வி வலய தெல்லிப்பழை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் மருதனார்மடத்தில் அமைந்துள்ள யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 15 வயதுப் பிரிவு

மல்லாகம் குளமங்கால் றோ. க. வி. எதிர் அளவெட்டி அருணோதயா.

### 17 வயதுப் பிரிவு

யூனியன் கல்லூரி எதிர் மல்லாகம் குளமங்கால் றோ. க. வி.

மல்லாகம் ம.வி. எதிர் வயாவிளான் ம. ம. வி.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான் ம.வி.

(க-86)

## மார்ச் 5ஆம் திகதி முதல்

# சித்த மருத்துவ விரிவுரைகள் நல்லூரில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கான அனைத்து விரிவுரைகளும் அடுத்த மாதம்5 ஆம் திகதி நல்லூர் பகுதியில் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள வீடுகளில் ஆரம்பமாகவுள்ளன.

நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள 166 ஆம், 168 ஆம் இலக்க வீடுகளையே தற்காலிகமாக வாடகைக்கு எடுத்துள்ள சித்த மருத்துவத் துறையினர் மீண்டும் கைதடிக்குச் செல்லும் வரையில்—

இந்தக் கட்டடத்திலேயே தமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைத் தொடர இருப்பதாகத் தெரிவித்தனர்.

கைதடிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த பின்னர் [illegible] சித்த மருத்துவத்துறைமாணவர்களின் விரிவுரைகள் அனைத்தும் காலத்துக்குக் காலம் பிற்போடப்பட்டு வந்தன.

இதனால் செய்முறைப் பரீட்சைகளை எதிர் நோக்கும் 3ஆம், 4 ஆம் வருட மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இவற்றை கருத்தில் எடுத்தே போதிய வசதிகள் இல்லாவிட்டாலும் கூட இந்த இருவீடுகளையும் வாடகைக்கு தற்காலிகமாக எடுத்து மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்கவிருப்பதாக சித்த மருத்துவத்துறைத் தலைவர் திருமதி சிறீகாந்தன் தெரிவித்தார்.

கைதடியில் இருந்த சித்த மருத்துவத்துறை கட்டடங்கள் யுத்த அனர்த்தங்களினால் அழிந்துள்ளன. அவற்றைத் திருத்தி அமைத்து மீண்டும் அங்கு விரிவுரைகளை ஆரம்பிப்பதற்குநீண்ட காலம் எடுக்கும் என்பதாலேயேஇந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க-6)

## மாநகர சபையின் அங்கீகாரமின்றி 60 கட்டடங்கள்

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அறுபதுக்கு மேற்பட்ட கட்டடங்கள் சபையின் அங்கிகாரமின்றி கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்டடங்கள் தொடர்பான விவரங்கள் மாநகர சபையினால் தற்பொழுது திரட்டப்பட்டு வருகின்றன.

இக்கட்டடங்களை சட்டப்படி அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-5)

## பண்டத்தரிப்பில் ஞாயிறு தேடுதல்

பண்டதத்தரிப்புப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பாதுகாப்புப்படையினரால் வீடு வீடாகத்தேடுதல் நடத்தப்பட்டது.

வீட்டு உறுப்பினர்களின் விவரங்கள், சிவில் குடும்ப அட்டையில் பதியப்பட்டபடி இருக்கின்றனவா என்றும் இத்தேடுதலின் போது பரிசோதனை செய்யப்பட்டது

(க-135)

# கொழும்பில் தமிழர் பகுதிகளில் ஞாயிறன்று திடீர்ச் சோதனைகள்

கொழும்பு, பெப். 20
கொழும்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை படையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

புறக்கோட்டை, கிராண்ட்பாஸ், கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை, முகத்துவாரம் உட்பட வேறு சில பகுதிகளிலும் இந்தச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

விடுதலைப்புலிகள் கொழும்பிற்குள் ஊடுருவி நாசகார வேலைகளில் ஈடுபட முயற்சித்து வருவதாக இரகசியத் தகவல்கள்கிடைத்துள்ளதால் மேலதிகாரிகள் பாதுகாப்புப் படையினரை உஷார் நிலையில் வைக்கும் பொருட்டே இந்தச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

## கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதியதில் இரு மாணவர் காயம்

தென்மராட்சி, பெப். 20
வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியினருகே நின்ற மரத்துடன் மோதியதில் அதில் பயணம் செய்த மாணவர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

கரவெட்டி கிழவிதோட்டம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நெல்லியடி மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொள்வதற்காக மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்தபோது சில்லுத் திடீரெனக் காற்றுப் போனதால் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்களான கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த கே. சுதாகரன் (வயது 19), பி. குருபரன் (வயது 19) ஆகியோரே விபத்தில் காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களாக மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## 1941 இல் மரணமான பிரெஞ்சு பிரஜை குறித்து தகவல் தெரியுமா?

யாழ்ப்பாணம். பெப். 20
யாழ்ப்பாணத்தில் 1941 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மரணமான பிரெஞ்சு நாட்டவர் ஒருவர் தொடர்பான விவரங்களை யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளர் ந. சதாசிவஐயர் கோரியுள்ளார்.

கவுண்ட் டி மணி (Count De Mauny) என்ற இந்த பிரெஞ்சுப்பிரஜைஇங்குதங்கியிருந்த சமயம் காலமானார் என்றும்—

அவரது நல்லடக்க ஆராதனையை கொழும்பு அதிமேற்றிராணியார் நிறைவேற்றியுள்ளார் என்றும்—

அவர் தொடர்பான விவரங்கள் தெரிந்தவர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளும்படியும்— பதிவாளர் சதாசிவ ஐயர் கேட்டுள்ளார்.

## பாம்பு தீண்டிய மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

தென்மராட்சி, பெப் 20
வெவ்வேறு இடங்களில் பாம்பினால் கடியுண்ட மூவரும் வெள்ளைப் பூரானால் கடியுண்ட ஒருவரும் கடந்த சனிக்கிழமை மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கப்பூதுவைச் சேர்ந்த எஸ். நடராசா (வயது 65), வல்வெட்டியைச் சேர்ந்த கே. பாலச்சந்திரன் (வயது 39), வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சி. அமிர்தலிங்கம் (வயது 30) ஆகியோர் பாம்பினாலும்—

அல்வாய் தெற்கைச்சேர்ந்த ஜே. றெஜினோல்ட்(வயது17) என்பவர் வெள்ளைப் பூரானாலும் கடியுண்ட நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-117)

## சந்தையும் கடைத்தொகுதியும் திறப்பு

வலி.வடக்கு பிரதேச சபையினால் அளவெட்டி மலைவேம்படியில் கிராமிய சந்தையும் கடைத்தொகுதியும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் வெளிக்கள இணைப்பு உத்தியோகத்தர் ஜோனஸ்மூசி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய சந்தையைத் திறந்து வைத்தார்.

வலி.வடக்கு பிரதேச செயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் கடைத்தொகுதியைத் திறந்து வைத்தார்.

11 லட்சம் ரூபா செலவில் இந்த வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. (ஐ-86)

## பாகிஸ்தானில் கதிர்காமர்

இஸ்லாமாபாத், பெப். 20
பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அந்நாட்டின் இராணுவ ஆட்சியாளரான ஜெனரல் பர்வேஸ் முஷாரப்புடன் வெள்ளிக்கிழமை பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

கதிர்காமரின் இந்தச் சந்திப்புக் குறித்து பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சார்க் அமைப்புக்குப் புத்துயிரளிக்கும் நடவடிக்கைகளுக்கு கதிர்காமர் மேற்கொண்டுவரும்முயற்சிகளைப் பாராட்டியுள்ளது. அத்துடன் சார்க் அமைப்பின் பிரச்சினைகளுக்கு இந்தியாவைக் கண்டித்தும் இருக்கிறது.

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தின் தற்போதைய நிலை குறித்து கதிர்காமர் பிரஸ்தாபித்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## சட்டநாதர் வீதி நிலையத்தில் 4 ஆயிரம் மரக்கன்றுகள் கடந்த ஆண்டில் விற்பனை

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்ப்பாணம் சட்டநாதர் வீதியில் உள்ள அரச மரக் கூட்டுத்தாபன மரக்கன்றுகள் உற்பத்தி நிலையத்தினால் கடந்த ஆண்டு 4 ஆயிரத்து 260 மரக்கன்றுகள் விற்பனை செய்யப்பட்டதாகப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டில் தேக்கு, சமண்டலை, மலைவேம்பு மற்றும் பலா உட்பட 5 ஆயிரம் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் அவற்றில் மிகுதியாக இன்னும் 740 கன்றுகள் உள்ளதாகவும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வடமாகாண முகாமையாளர் க. விஜயரட்ணம் தெரிவித்தார்.

இத்துடன் இந்த ஆண்டுக்கான மரக்கன்றுகள் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வீட்டுக் காணிகளிலும் மற்றும் பொது நூலகங்கள், அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பிரதேச சபைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றிலும் மரங்களை நடுவதன் மூலம் குடாநாட்டில் மரங்களைப் பெருக்கி வளம் காண மரக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10-ரி)

## அனுமதிக் கடிதங்கள் கிடைக்கவில்லை

தென்மராட்சி, பெப். 20
மட்டக்களப்பு தேசியக் கல்வியியல் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இதுவரை அனுமதிக் கடிதம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது (ம-117)

## நூல் வெளியீடும் ஒன்றுகூடலும்

வலி, வடக்கு, பெப். 20
தெல்லிப்பழை கலை இலக்கிய கத்தகத்தின் 46 ஆவது ஒன்றுகூடலும் திருமதி தையல் பிள்ளை அப்பாக்குட்டி நினைவு இலக்கிய நிகழ்வை ஒட்டிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமையில் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இடைநிலை வகுப்பு மாணவருக்கான மேலதிக வாசிப்பு நூலான வலிகாமம் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரனின் 'விஞ்ஞானக் கதைகள்' என்ற நூலும் பண்டிதர் சி. அப்புத்துரையின் 'நற்சிந்தனைகள் நாற்பது' என்ற நூலுமே வெளியிடப் படவுள்ளன. (ஐ-86)


ஓம் ஸ்ரீராம ஜெயம்
வண்ணை
### ஸ்ரீ வேங்கடேச வரதராசப் பெருமாள் தேவஸ்தானம் இலட்சார்ச்சனைப் பெருவிழா

இவ்விழா நிகழும் விக்கிரம வருடம் மாசிமாதம் 9 ஆம் நாள் 21-02-2001 புதன்கிழமை முதல் மாசி மாதம் 18 ஆம் நாள் (02-03-2001) வெள்ளிக்கிழமை வரை பத்துத்தினங்கள் நடைபெறும்.

தினமும்
காலை 8.30 மணி ஸ்நபன அபிஷேகம் விசேட பூஜை
பிற்பகல்: 3.15 '' சாயரட்சை பூஜை
3.30 '' நியாசபூர்வ அர்ச்சனை ஹோமம்
4.30 '' இரண்டாம் கால பூஜை
4.45 '' நியாசபூர்வ அர்ச்சனை ஹோமம்
5.45 '' அர்த்தஜாம பூஜை நடைபெறும்.

பூர்த்தித்தினமான 02-03-2001 வெள்ளிக்கிழமை பிற்பகல் பொது உபயமாக நடைபெற இருப்பதால் அன்றைய தினம் சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய விரும்புபவர்கள் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.
அடியார்கள் பூவகை, வில்வம், துளசி, அபிஷேக, ஹோம திரவியங்களை வழங்கி உதவலாம்.
(84270) ஆதீன மகாசபை.



### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி சக மாணவியும் உயிர்த்தோழியுமான
கந்தையா தவமலர்
அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கேற்று அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
2000 A/L கலைப்பிரிவு மாணவர்கள்.
யாழ்ப்பாணக்கல்லூரி.
வட்டுக்கோட்டை. (84357)



### வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகு
போரூட், தம்பசிட்டி.
பழைய மாணவர்களுக்கான
கொம்பியூட்டர் பயிற்சி நெறி

★ ஆரம்பம்: MAY 2001
★ ஆர்வமுடைய பழைய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்
★ முடிவு திகதி: 18-03-2001
★ மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
★ B. A. Part I, II வகுப்புகள் 24-02-2001 ஆரம்பம்.
(84369) -நிர்வாகம்



### கண்ணீர் அஞ்சலி

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின்
H. N. D. M. முதலாம் வருட மாணவன்
பா. பிரசன்னாவின்
பாசமிகு தந்தையாரான
அமரர் Dr. கந்தையா பாலசிங்கம்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
முதலாம் வருட மாணவர்கள்
யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனம்.
(84370)



### 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லையா சின்னத்துரை
(சின்னத்தம்பி)
மலர்வு 15-09-1920 உதிர்வு 17-02-1996
திதி: 20-02-2001
ஆண்டுகள் ஐந்து ஆனதோ இன்று!
எங்கள் ஐயாவைக் காணாது
தவிக்கின்றோம் இங்கு.
உங்கள் ஆத்மா சாந்தியடையக் கடவுளை வேண்டுகின்றோம்.
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
''குமுதினி இல்லம்'',
இராஜ வீதி,
நீர்வேலி வடக்கு. (84372)



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடத்திய வெளிக்கள உத்தியோகஸ்தர்களுக்கிடையிலான போட்டியில் யாழ்.மாவட்டத்தின் காப்புறுதி அமைப்பாளரான சரவணமுத்து சண்முகராஜா மேலதிக பொதுமுகாமையாளர் சுசந்த பெரேராவிடம் பரிசு பெறுகிறார். இவ்வைபவம் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (ஐ)



ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அண்மையில் நடைபெற்ற தையல், மனையியல் கண்காட்சியினை வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் நாடா வெட்டி ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம். அருகில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், கிராம அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட (திருகோணமலை) உத்தியோகத்தர் கு.பாலகிருஷ்ணன், வேலணை உதவி அரசாங்க அதிபர் செ.இரத்தினம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஐ-73)

# 10 எம்.பிக்கள் குழுவினர் நோர்வேக்கு செல்கின்றனர்

கொழும்பு,பெப்.20

நோர்வே நாட்டுக்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விஜயம் செய்யவுள்ளனர்.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் குறித்து ஆராயும் பொருட்டே இவர்கள் அங்கு செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி பங்குபற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் நோர்வேயில் உள்ள சர்வதேச பிரச்சினைகள் ஆய்வு நிலையத்தில் நடத்தப்படும் கற்கை நெறிகளில் ஒரு வார காலம் பங்கேற்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க-ஓ)

# கீரிமலையில் வர்த்தகம் செய்ய எவருக்கும் அனுமதி இல்லை

வலி.வடக்கு,பெப்.20

மகா சிவராத்திரியை முன்னிட்டு கீரிமலைக்கு பக்தர்கள் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அங்கு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் தெல்லிப்பழையில் சோதனை நிலையத்திற்கு தெற்குப்புறமாக அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு அருகில் பஸ்கள் மற்றும் தனியார் மினிபஸ்கள் நிறுத்தப்படுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-86)

# சாவகச்சேரி பிரதேச சபையின் ஆயுள்வேத மருந்தகங்கள் வல்லை, இருபாலையில் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.20

சாவகச்சேரி பிரதேச சபையின் இரண்டு ஆயுள்வேத மருத்துவ நிலையங்கள் இருபாலையிலும், வல்வெட்டித்துறையிலும் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

இருபாலையில் மருந்தகத்தை சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவரும், வல்வெட்டித்துறையில் மருந்தகத்தை வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரும் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வுகளில் வைத்தியர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பங்குபற்றினர்.

மக்கள் இடம்பெயர்ந்துள்ள தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு சாவகச்சேரி பிரதேசசபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (க-ரி)

## ஒறேட்டர் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,பெப்.20

ஒறேட்டர் சி.சுப்பிரமணியத்தின் ஏழாவது நினைவுதின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அதிபர் கே.சிவாஜி தலைமையில் நடைபெறும்.

'மனித ஆளுமைக் கல்வி' என்ற தலைப்பில் நினைவுரையை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சமூக மருத்துவத்துறை விரிவுரையாளர் டாக்டர் சி.எஸ்.நச்சினார்க்கினியன் ஆற்றுவார். (ம)

# புலிகள் மீதான தடை விவகாரத்தில் பிரிட்டன் நிதானமாக நடக்கவேண்டும்!

## கூட்டணி சம்பந்தன் தூதரிடம் வலியுறுத்து

கொழும்பு,பெப்.20

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் புலிகள் இயக்கத்தை தடை செய்யும் விடயத்தில் பிரிட்டன் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும். தடை செய்யப்பட உள்ள பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் புலிகள் இயக்கத்தைச் சேர்த்துக் கொள்வதைப் பிரிட்டன் பின்தள்ளிப் போடுவது உசிதமாக இருக்கும் என்று கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரை சந்தித்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுச் செயலாளர் இரா. சம்பந்தன் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

பிரிட்டிஷ் தூதர் லிண்டா டபீல்டை கடந்த பெப்ரவரி முதலாம் திகதி சந்தித்து புலிகளை தடை செய்யும் விடயத்தில் பிரிட்டன் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்று விடுத்த வேண்டுகோளைத் தான் மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

"புலிகள் இயக்கத்தினர் சமாதான முயற்சிகளுக்கு இணக்கம் தெரிவிக்கும் வகையில் பல நல்லெண்ண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இலங்கை அரசு யுத்தநிறுத்தத்திற்கு இணங்காத போதிலும்கூட புலிகள் தன்னிச்சையாக கடந்த டிசெம்பர் 24ஆம் திகதி யுத்த நிறுத்தத்தை பிரகடனம் செய்திருந்தனர். இது தவிர நோர்வே அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு புலிகள் இயக்கம் இணக்கம் தெரிவித்து சாதகமாக நடந்து வருகிறது.

பிரிட்டன், புலிகள் இயக்கத்தை தடை செய்யுமானால் இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு அது குந்தகமாக அமையும். தவிர பிரிட்டன், புலிகள் இயக்கத்தைத் தடை செய்யுமானால் இலங்கையிலுள்ள தீவிரவாத சக்திகளின் கைகளை பலப்படுத்துவதாகவே அது அமையும்.

ஆகவே தடை செய்யும் இயக்கங்களின் பட்டியலில் புலிகள் இயக்கத்தைச் சேர்த்துக் கொள்ளும் விடயத்தில் பிரிட்டன் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளேன்" - என்று சம்பந்தன் தெரிவித்தார். (ஐ-190)

# ரூ.30 லட்சம் செலவில் புதிய கட்டடம்

சங்கானை,பெப்.20

சுமார் 30 லட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டடம் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் இவ்வருட இறுதிக்குள் கட்டப்படவுள்ளதாக வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து உரையாற்றிய சங்கானை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா, விளையாட்டு, உடற்பயிற்சி போன்றவற்றில் மாணவர்கள் கூடிய அக்கறை எடுக்க வேண்டும் - என்றார்.

(க-29)

# நகுலேஸ்வரர் ஆலயத்தில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.20

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நாளை சிவராத்திரியன்று திருக்குறிப்புத்தொண்டர் சபையின் ஆதரவில் நடைபெறவுள்ள பசு பாதுகாத்தல் பிரார்த்தனையில் சைவப்புலவர் சு.செல்லத்துரையின் 'சைவ மக்களின் வாழ்வில் பசுவின் தேவைகள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவும் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட மாணவிகளின் திருமுறை ஓதல் நிகழ்வும் இடம்பெறும். (ம)

# மின் இணைப்பை துண்டிக்கும் விஷமிகள்

அரியாலை,பெப்.20

நீர்வேலி தெற்குப் பகுதியில் விஷமிகள் சிலர் மின்சார இணைப்புக்களைத் துண்டித்து பொதுமக்களுக்குச் சிரமம் கொடுத்து வருகின்றனர்.

பூதர்மடம் பகுதியில் இரவு நேரத்தில் இவ்வாறு அடிக்கடி நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-17)

# மந்தாவோடை மயான மேலதிகக் காணியை பகிர்ந்தளிக்கமுடிவு

வலிகாமம் தெற்கு,பெப்.20

வலிகாமம் தெற்கு மந்தாவோடை மயானக் காணியில் உள்ள மேலதிக நிலம் அப்பகுதியில் குடியிருக்கும் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த மயானக் காணியில் முப்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்போது குடியிருந்து வருகின்றன. மயானத்துக்குத் தேவையான காணியை விட அங்குள்ள மேலதிக காணிகளை அக்குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்க வலிகாமம் தெற்கு பிரதேச சபையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகின்றது. (க-152)

# வாசகர் திருமுகம்

## எழுதுநர் வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் ஒருவரின் கோரிக்கை

அரச எழுதுநர் நியமனத்தில் இரண்டாம் கட்டத் தெரிவில் 53 பேரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 24,25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இரண்டாம் கட்டத் தெரிவுக்கான வெட்டுப் புள்ளியான 135 தான் உயர்வானது. இது 08-02-2001 உதயனில் வெளியானது.

10-02-2001 இல் வெளியான உதயனில் பெயர் விவரம் வெளியாகியுள்ளது. இதில் பெரும்பான்மையானோர் ஏற்கனவே அரசாங்க பதவிகளில் உள்ளவர்களாகவும், பல்கலைக்கழக மாணவர்களாகவும், பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருப்போராகவும் இருப்பதைக் காண முடிகின்றது. இதில் தவறோ, குறையோ இல்லை.

சம்பந்தப்பட்டோர் சும்மா போய் ஒருதரம் நேர்முகப்பரீட்சை எதிர்கொண்டு பார்ப்போம் என்றும் சிறிது காலத்தில் நல்ல வேலை கிடைத்தால் மாறலாம் தானே என்றும் மற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் வரை வேலை செய்யலாம் என்றும் நினைக்காது உறுதியுடன் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

வெட்டுப்புள்ளியால் பல்கலைக்கழக அனுமதியும் கிடைக்காது இதைப் போன்ற பல பரீட்சைகளை நாட்டு நிலைமையால் கோட்டைவிட்டும், மேற்படி நிலையில் புறக்கணிக்கப்பட்டும் அல்லல்படும் அதிர்ஷ்டமற்ற நிலையில் உள்ள எங்களுக்கு உதவுவீர்கள் என எண்ணுகிறேன்.

*பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

ஆர்.ராஜ்கோபி

## தமிழ் மாணவர் கல்வியை அழிக்க இவர்களும் உடந்தையா?

யாழ். மாவட்ட மக்களின் பெரும் சொத்தாக இருப்பது கல்வி என்பதை அனைவரும் அறிவர். இந்தக் கல்வியை தமிழ் மாணவர்களிடையே அழித்தொழிக்க பல்வேறு நடவடிக்கைகளை பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவதை கல்விச் சமூகம் அறிந்த விடயமாகும்.

தமிழ் மாணவர்களின் கல்வியினை அழிக்க எடுக்கும் முயற்சிகளை மாகாண மாவட்ட கல்வி அதிகாரிகள் மறைமுகமாக ஆதரவு வழங்குவது கண்கூடாக உள்ளது. மாணவர்களின் கல்வித் தேவைக்குப் பாடப் புத்தகங்கள் அத்தியாவசியம் என்பதை அனைவரும் அறிந்த போதிலும் பாடப் புத்தகங்கள் வடபகுதிக்கு அனுப்புவதற்கு அரசு திட்டமிட்டு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவது போல மாகாண, மாவட்ட, வலய கல்வி அதிகாரிகள் பாடப் புத்தகங்களை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதில் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

பாடப் புத்தகங்கள் இலவசமாக அந்தந்த வருடங்களில் வடபகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது என தம்பட்டம் அடித்து அறிக்கை வெளியிடும் அரசு தென்னிலங்கை மாணவர்களுக்கு வருடாவருடம் புதிய பாடப் புத்தகங்களை வழங்கிவருகின்ற போதிலும் வடபகுதிக்கு தொடர்ச்சியாக மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களை அனுப்புவதில் அசிரத்தை காட்டிவருகிறது.

தமிழ் மாகாண கல்வி அதிகாரிகளும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தாதது கடந்த வருடங்களில் தமிழ் பிரதேசங்களில் மாணவர்கள் பாடப் புத்தகங்கள் இல்லாத நிலையில் கல்வி கற்றதை மறக்க முடியாது.

பாடப் புத்தகங்களுக்கான பயிற்சி புத்தகங்கள் தேவையான அளவு புத்தகக் கடைகளில் விற்பனையாகின்றன. இப் புத்தகங்களை தனியார் வர்த்தகர்களால் கொண்டுவரமுடியுமாயின் அரச அதிகாரிகளால் ஏன் எடுத்து வரமுடியாது?

தென்மராட்சி பகுதி பாடசாலைகளில் 2000 ஆம் ஆண்டில் தரம் 10 இல் கல்விகற்ற மாணவர்கள் எந்தவொரு புத்தகமும் வழங்கப்படாத நிலையில் இடம்பெயர்வினால் கைவசம் இருந்த புத்தகங்கள் அனைத்தையும் கைவிட்டு, தற்போது தங்கியுள்ள பகுதிகளில் பாடப்புத்தகங்கள் இன்றியே ஒரு வருட காலத்தைக் கழித்து விட்டனர்.

க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் புத்தகங்கள் இன்றி கல்விகற்று பரீட்சையில் திறமையான பெறுபேறுகளை எங்ஙனம் எதிர்பார்ப்பது?

யாழ்.கல்வித் திணைக்களத்திற்கு வந்துசேர்ந்த புத்தகங்களில் தென்மராட்சி கல்விக் கோட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல் இடம்பெயர்வினால் கஷ்டமுறும் மாணவர்களை மேலும் கஷ்ரப்படுத்தும் வகையில் ஒரு சில புத்தகங்களை மட்டுமே மாகாண கல்வித் திணைக்களம் வழங்கி தன்னுடைய கடமையை முடித்துவிட்டது போல உள்ளது.

எனவே மாணவர்களாகிய நாங்கள் எங்களது உரிமைகளை போராடியே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருவதை மாணவ சமுதாயம் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் மாணவர் சமுதாயத்திற்கு கிடைக்க வேண்டிய பாடப் புத்தகங்கள், சீருடைத் துணிகள் ஆகியவற்றினை உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு எமது கல்விச் சொத்தினை அழியவிடாமல் பாதுகாக்க ஒற்றுமையுடன் செயல்பட்டு எமது உரிமைகளைப் பெற்றிட மாணவர் சமுதாயம் மட்டுமல்ல கல்விச் சமூகம், பெற்றோர், நலன் விரும்பிகள் ஆகியோரும் ஆதரவு நல்க வேண்டும். நல்குவார்களா?

- பாதிக்கப்பட்ட தென்மராட்சி மாணவர்கள்.

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.20

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தோரில் இம்மாதம் 18ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:

**சங்கானைன**

(178656ஏ) (179389ஏ) (182583ஏ) (182583பி) (182583சி) (182671ஏ) (182671பி) (182671சி) (182712ஏ) (182759ஏ) (182791ஏ)

**யாழ்ப்பாணம்**

(173814ஏ) (173841பி) (173814சி) (175368ஏ) (175368பி) (175368சி) (178225ஏ) (178419ஏ) (180108ஏ) (180108பி) (180108சி) (180236ஏ) (180236பி) (181726ஏ) (181792ஏ) (181806ஏ) (181949ஏ) (181949பி) (181951ஏ) (181995ஏ) (181995பி) (181995சி) (181995டி) (182120ஏ) (182127ஏ) (182127பி) (182127சி) (182181ஏ) (184343ஏ)

**நல்லூர்**

(173755ஏ) (173755பி) (180239ஏ) (181721ஏ) (181721பி) (181961ஏ) (182006ஏ) (182187ஏ) (182187பி) (182187சி) (191798ஏ) (191798பி) (179331ஏ) (179363பி) (182643ஏ) (182643பி) (182643சி) (182752ஏ) (182752பி) (182832ஏ) (182832பி) (182832சி) (183091ஏ) (183091பி) (183091சி) (183125ஏ) (183153ஏ) (183153பி) (183161ஏ) (183207ஏ)

**சண்டிலிப்பாய்**

(176649ஏ) (178658ஏ) (178658பி) (179007ஏ) (179007பி) (179008ஏ) (179091ஏ) (179091பி) (181480ஏ) (181480பி) (181537ஏ) (181537பி) (183068ஏ) (183081ஏ) (183086ஏ) (183142ஏ) (183178ஏ)

**தெல்லிப்பழை**

(172736ஏ) (181683ஏ)

**உடுவில்**

(173167ஏ) (173167பி) (173167சி) (178845ஏ) (178845பி) (179200ஏ) (179484ஏ) (179484பி) (182824ஏ) (182825ஏ) (182825பி) (183063ஏ) (183063பி) (183067ஏ) (183067பி) (183067சி) (183144ஏ) (188319ஏ)

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தோரில் இம்மாதம் 19ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:

**சங்கானை**

(179212ஏ) (179212பி) (181622ஏ) (181622பி) (181622சி) (181659ஏ) (181659பி) (181660ஏ) (181660பி) (181681ஏ) (182743ஏ) (189165ஏ) (189165பி)

**நல்லூர்**

(173068ஏ) (173068பி) (179335ஏ) (179335பி) (179335சி) (179335டி) (179335ஈ) (179335எப்) (181521ஏ) (181521பி) (182687ஏ) (182699ஏ) (182758ஏ) (182758பி) (182758சி) (182773ஏ) (182862ஏ) (183032ஏ) (183032பி) (183032சி) (183032டி) (183050ஏ) (183050பி) (183123ஏ) (183256ஏ) (183281ஏ) (183281பி) (183281சி) (183281டி)

**சண்டிலிப்பாய்**

(178767ஏ) (178972ஏ) (179299ஏ) (179299பி) (179299சி) (181603ஏ) (181603பி) (181635ஏ) (181635பி) (181645ஏ) (182578ஏ) (182579ஏ) (182827ஏ) (183085ஏ) (183099ஏ) (183099பி)

**தெல்லிப்பழை**

(183139ஏ)

**உடுவில்**

(178646ஏ) (178646பி) (178646சி) (178923ஏ) (182594ஏ) (182594பி) (182564சி) (182754ஏ) (182830ஏ) (182830பி) (182830சி) (183172ஏ) (183172பி) (183289ஏ) (183289பி)

(க.10)

## சிஹல உறுமய எம்.பி.திலக் பதவி துறக்கிறார்

சிஹல உறுமய கட்சியின் ஒரே ஒரு எம்.பி யான திலக் கருணாரத்ன விரைவில் தமது எம்.பி பதவியை துறக்கவிருக்கிறார்.

இவரது இடத்துக்கு புதிய எம்.பியாகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்மிக ரணவக்கே நியமிக்கப்படவிருக்கிறார்.

இதற்கான தீர்மானத்தை கட்சியின் அரசியற் குழு எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

திலக் கருணாரத்தின கட்சியின் தலைவராக நியமிக்கப்படுவார் எனத் தெரியவருகிறது.

## மீசாலை வீரசிங்கம் மாணவருக்கு உதவி

யாழ்ப்பாணம்,பெப்.20

இடம் பெயர்வு நிலையில் பொது நிறுவனங்களின் உதவிகள் ஏதும் இன்றி கஷ்டப்படும் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வித்தியாலய ஆசிரியர்கள் இணைந்து கற்றல் உபகரணங்களை அன்பளிப்புச் செய்ததாக வித்தியாலய அதிபர் கு.சிவானந்தம் தெரிவித்தார். (ம-117)

## நினைவு தினம் அனுஷ்டிப்பு

யாழ்.செயலக மேலதிக மாவட்டப் பதிவாளராகப் பணியாற்றி, 1995ஆம் ஆண்டு இடம்பெயர்வின் போது அமரரான அகிலேசன் பொன்னம்பலத்தின் ஐந்தாவது நினைவு தினம் மாவட்ட பதிவகத்தில் கடந்த வாரம் நினைவுகூரப்பட்டது.

அமரரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிந்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (க-3)

## வேலணையில் திறப்பு விழா

புனர் நிர்மாணம் செய்யப்பட்ட வேலணை தெற்கு ஐயனார் சனசமூக நிலையத்தின் திறப்பு விழாவும் சிவன் இராத்திரி விழாவும் நாளை புதன் கிழமை நிலைய முன்றிலில் நடைபெறும்.

நிலையத் தலைவர் மு.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாக ஈ.பி.டி.பி யின் தீவக அமைப்பாளர் ந.மதனராஜா, வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரமூர்த்தி, தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலர் செ.இரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இவ்விழாவில் ஐயனார் முன்பள்ளி மாணவர்களின் கரகாட்டம், காவடிப் பாட்டு, கண்ணபுர முன்பள்ளி மாணவர்களின் அபிநய நடனம் மற்றும் நாடகங்களும் இடம்பெறவுள்ளன. (க)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 07 - 12 - 1939

மறைவு 21 - 01 - 2001

## செல்வி பரமேஸ்வரி இராமலிங்கம்

(கல்வயல், சாவகச்சேரி)

எமது அன்புத் தெய்வம் 21.01.2001 அன்று கொழும்பில் காலமான செய்தி கேட்டு அங்கு வந்து பல வழிகளிலும் உதவிய, குறிப்பாக மோகன்ஸ், அகிலன், சீலன், ரஞ்சி ஆகியோருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட கல்வயல் வாசி மக்களுக்கும், துயர் பகிர்வினைப் பத்திரிகை மூலம் தெரிவித்தவர்களுக்கும், நேரில் இங்கு வந்து அனுதாபம் தெரிவித்துச் சென்றோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அன்னாரது ஆத்ம சாந்திக் கிரியைகள் விஸ்வமடுவில் இடம்பெறும்.

அன்னாரது நினைவாக இன்று நவாலி மானிப்பாய் மகேஸ்வர இல்லப் பிள்ளைகளுக்கு மதியபோசனம் வழங்கப்படும்.

*கல்வயல்,*
*சாவகச்சேரி.* (84078)

அன்புச் சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 08 - 03 - 1910

உதிர்வு 21 - 01 - 2001

## அமரர் காசிநாதர் சிவகுரு

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

21-01-2001 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (20-02-2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தற்காலிக முகவரி:
*சி.செல்வராசா,*
*கோப்பாய் மத்தி.*

நிரந்தர முகவரி:
*கைதடி கிழக்கு.*

(84322)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் காசிநாதர் சிவகுரு

(கைதடி கிழக்கு, கைதடி)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நீர் இயந்திர இயக்குநராகக் கடமை புரியும்
திரு.சிவகுரு சிவலிங்கராசாவின
அருமைத் தந்தையார் அமரர் காசிநாதர் சிவகுரு

21-01-2001 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன், இன்றைய தினம் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் அவரது ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

அதிபரும் உத்தியோகத்தர்களும்.
அரச முதியோர் இல்லம், கைதடி.

(84353)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1942 - 12 - 21

விண்ணில் 2000 - 02 - 20

## திருமதி (டோறா) அற்புதநேசம் ராஜா

(கற்கோவளம்)

(இளைப்பாறிய தாதி, மந்திகை ஆதார வைத்தியசாலை)

நீர்க்குமிழி வாழ்க்கையென தேசத்தோர் சொன்ன அந்த
வார்த்தைக்கு உதாரணமாய் மாண்டாயோ அற்புதமே! சிறகிழந்த
பறவையென பேச என்னை நீ தனிவைத்தேளகியதோ
நிற்கு மனம்.
கண்ணின் மணி போலக் காதலுடன் பெற்றெடுத்து
வண்ண மடிமேல் வளர்த்த சுகம் நாம் மறவோம் அம்மா -
சீரும் சிறப்புடனும் நாம் வாழ
இரவு பகல் பாராது உழைத்த எங்கள் அன்புத் தெய்வமே!
அம்மாவே, ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் எம் வாழ்வு உள்ள வரை
உங்களின் நினைவு எம்மை விட்டு அகலாது.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை மன்றாடுகிறோம்.*

உங்கள் பிரிவால் உருகும்:
**கணவர்,**
பிள்ளைகள்: **உதயகுமார், டிலோஷினி** (கனடா),
**உஷாந்தினி** (கல்வித் திணைக்களம், பருத்தித்துறை),
**எரிக் டினேஷ்** (லண்டன்)
மருமகன்: **S.உதயகுமார்** (கனடா)

*கற்கோவளம், பருத்தித்துறை.* (C/15301)

---

# நினைவில் நீங்கா ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 - 07 - 1931

மறைவு 03 - 03 - 2000

## திருமதி பவளம் செல்லத்தம்பி

திதி: 20.02.2001

துன்பச் சுமைகள் நிறைந்து
சுமை தாங்கியாய் நாமிருக்க - மேலும்
துன்பம் தந்து பிரிந்து சென்ற தாயே - அம்மா
ஆண்டு ஒன்று ஆனாலும் அழிவிலாது
உங்கள் நினைவுகள்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர்: மு.செல்லத்தம்பி M.L.T, J.P,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள்

*63, சங்கிலியன் வீதி,*
*நல்லூர்.* (84271)

# இலங்கை மீனவர்கள் மீன்பிடிக்க ஒரு பாதுகாப்பான கடற்பாதை

## இந்தியாவுடன் இலங்கை பேச்சு நடத்தும்

கொழும்பு,பெப்.20

இந்தியக் கடல் எல்லையில் பாதுகாப்பாகக் கடந்து சென்று அரபிக் கடல் பகுதியில் உள்ள சர்வதேசக் கடற் பரப்பில் இலங்கை மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பதற்கு இலங்கை இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இவ்வாறு இந்தியக் கடல் எல்லையைக் கடக்கும் போது ஏற்படும் சட்ட ரீதியான பிரச்சினையைத் தவிர்ப்பதறகாகவே இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக அதிகாரிகள் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

இந்திய கடற்பகுதிக்குள் இலங்கை மீனவர் வசிக்கும் போது அடிக்கடி இடம்பெறும் கைதுகள் குறித்து பேச்சுவார்ததை நடத்துவதற்காக விரைவில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹரேந்திர கொரியா இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக வெளிநாட்டு அமைச்சு பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடற் பரப்பை இலங்கை மீனவர்கள் பாதுகாப்பாகக் கடந்து செல்லும் பாதை தொடர்பான சில வரைபடங்களை தேசிய கடல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (நாரா) தயாரித்துள்ளது.

இந்த வரைபடங்களை தமது விஜயத்தின் போது பிரதி அமைச்சர் ஹரேந்திர கொரியா எடுத்துச் செல்வார். இந்தியக் கரைக்கு மிகச் சமீபமாக உள்ள இந்தக் கடற்பாதையால் இலங்கை மீனவர்கள் செல்வதற்கு இந்தியாவை இணங்கச் செய்ய முடியும் என எதிர்பார்க்கிறோம என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த மார்க்கத்தை விட வேறு மார்க்கம் தொடர்பான வரைபடம் ஒன்றையும் இந்தியாவின் பரிசீலனைக்கு அனுப்புவதற்காக 'நாரா' தயாரித்து வைத்திருப்பதாக நாராவின் பணிப்பாளர் நாயகம் டி.எஸ். ஜெயக்கொடி கூறியுள்ளார்.

இந்தியக் கடற்பரப்பில் பிரவேசிக்கும் இலங்கை மீனவர் அடிக்கடி கைது செய்யும் சம்பவங்கள் பாதுகாப்பான கடல் மார்க்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையில் இலங்கை ஈடுபட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (க)

## சாரதி நியமனம்

யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை அலுவலகத்துக்கு புதிதாக எடுத்து வரப்பட்ட வாகனத்துக்கு சாரதி ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி வாகனம் கடந்த வருட இறுதியில் எடுத்துவரப்பட்ட போதும் வாகனச் சாரதி நியமிக்கப்படாமல் இருந்ததால் அதனைப் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது.

தற்போது வாகன சாரதி ஒருவருக்கு தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார். (க-6-ரி)

## சாவகச்சேரி, மட்டுவில் மக்கள் உடைமைகளை மீட்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.20

சாவகச்சேரி நகரிலிருந்து மட்டுவில் வரையான பகுதியில் வசித்த மக்களின் உடைமைகள் மீட்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்திலுள்ள வீட்டு உரிமையாளர்கள் தத்தமது கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தமது உடைமைகளை மீட்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தினமும் பத்து பொதுமக்கள் வரை இந்தப் பகுதிகளுக்கு தமது வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படவுள்ளனர். (க-5)

## செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.20

கைதடியில் மீளக்குடியமர்ந்தவர்களின் நலன்களைக் கவனிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுககவும் உள்ளூர் அதிகாரிகள் பங்குபற்றும் கூட்டம் ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. (உ-3)

## பிரிட்டனில் புலிகளை அடக்கி சமாதானம் ஏற்படுத்த முடியுமா?

### அரசைச் சாடுகிறார் விக்கிரமபாகு

கொழும்பு,பெப்.20

பிரிட்டனில் விடுதலைப் புலிகளை அடக்கி இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தலாம் என்று அறிவில்லாதவர்களாலேயே நினைக்க முடியும் என்று புதிய இடதுசாரி முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

புதிய இடதுசாரி முன்னணி தலைவர்கள் குழு சார்பாக கலாநிதி விக்கரமபாகு கருணாரத்தின கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரிட்டன் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைச் சட்டத்தை பயன்படுத்தி இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சிந்திக்கும் அரசையும் வெறிபிடித்த இனவாதக் கும்பலையும் கண்டிப்போம்.

இப்பயங்கரவாதப் பிரேரணை அனைத்து இடதுசாரிகளினதும் முற்போக்குவாதிகளினதும் கடும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. உழைக்கும் மக்களையும், முற்போக்கு அமைப்புக்களையும் அடக்குவதற்காகவே இப்பிரேரணை கொண்டுவரப்படுவதாக அனைத்து இடதுசாரிகளும் விளக்கமளித்திருக்கின்றனர்.

உண்மையில் யுத்தத்தை நிறுத்தித் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அதிகாரப் பரவலாக்கல் மூலமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சங்கீத சபையின் செயலமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.20

வட இலங்கை சங்கீத சபையினரால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் கருத்தரங்கும் செயலமர்வுத் தொடரும் அடுத்த மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகி 26 ஆம் திகதி வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் கலந்து கொள்வோர் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-6-ரி)

## பச்சிலைப்பள்ளி மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

### நாளை விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.20

பச்சிலைப்பள்ளியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் தெரியப்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெயர்ந்தோர் நலனோன்பு சங்கத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி வணிகர்கழகம், கிளாலி, புலோப்பளை கடற்றொழிலாளர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம், தென்னை உரிமையாளர்கள் சங்கம், ப.தெ.வள கூட்டுறவுச் சங்கம் போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-5-117)

## இடம்பெயர்ந்த பச்சிலைப்பள்ளி விவசாயிகளுக்கு கடன்உதவி

யாழ்ப்பாணம்,பெப்.20

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் நலனோன்புச் சங்கம் இக் கடனுதவியை வழங்கவுள்ளது.

இந்தக் கடனுதவியைப் பெற விரும்பும் - தற்பொழுது விவசாய செய்கையில் ஈடுபட்டிருக்கும் - விவசாயிகளை மேற்படி சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-5)

## வடக்கு மீனவர் பிரச்சினைகள்; விரைவில் உயர்மட்ட மாநாடு

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.20

வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் தொழில் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் மற்றும் மீனவர்களது புனர்வாழ்வு, அபிவிருத்தி, வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றில் விசேட நடவடிக்கைளை முன்னெடுக்கவும் விரைவில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்த உயர் மட்ட மாநாட்டில் மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகள், படை அதிகாரிகள் மற்றும் வடபகுதி அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்புடன் தொடர்புடைய உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இதேவேளை இம்மாநாட்டில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் குறித்து எதிர்வரும் 23ஆம் திகதி குடாநாட்டில் உள்ள மீனவர் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடல் நடத்தவுள்ளார் எனறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மட்டுவில் படையினரிடம் சிக்கிய திருட்டுப் பேர்வழிகள்

### நீர்வேலி தரவைப் பகுதியில் கண்காணிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.20

மட்டுவில் பகுதியில் ஆள்கள் இல்லாத வீடுகளில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பலர் படையினரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

கிராம அலுவலர் சகிதம் இந்தப் பகுதி வீடுகளைப் பார்வையிடச் சென்ற இராணுவத்தினரிடம் சிக்கிய திருடர்கள் திரு திருவென விழிக்கத் தொடங்கினார்கள்.

தேங்காய் உட்பட பல பொருள்களை அவர்கள் கட்டி வைத்திருந்தனர். அவற்றைப் பறிமுதல் செய்த படையினர் எச்சரிக்கையின் பின்னர் அவர்களை விடுவித்தனர்.

இதேவேளை நீர்வேலித் தரவை ஊடாக தென்மராட்சி பகுதிக்குச் செல்பவர்கள் ஆள்களில்லாத வீடுகளில் பெறுமதியான பொருள்களைத் திருடி வருவதாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்து நீர்வேலி தரவையில் படையினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (க-5)

## இராணுவத்தினரின் கைதுகள், சித்திரவதைகள் தொடர்கின்றன

# காணாமற் போனோர் குறித்து அரசு உறுதியான பதிலைத் தெரிவிக்க அழுத்தம் தர வேண்டும்

## யாழ். வந்த அமெரிக்கத் தூதுக் குழுவினரிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.20

1996 ஆம் ஆண்டில் காணாமல் போனவர்கள் தொடர்பாக சரியான தகவல்கள் எதுவும் அரசாங்கத்தினால வெளியிடப்படவில்லை. எனவே இது தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து காணாமல்போனவர்கள் தொடர்பாக உறுதியான முடிவைத் தெரிவிக்க வகை செய்ய வேண்டும்.

இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதுக்குழுவினரிடம் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

காணாமல் போனவர்கள் தொடர்பாக அரசாங்கம் அவர்களின் உறவினர்களை ஏமாற்றிவருகிறது. செம்மணி புதைகுழி அகழ்வின் போது எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளுக்கு உரித்தானவர்கள் யார் என்பது இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் வருடா வருடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு ஏமாற்றி வருகிறது அரசு.

செம்மணியில் இடம்பெற்ற கைதடி மாணவி கிருசாந்தி பாலியல் வல்லுறவு, 4 கொலை வழக்கில் முதலாம் எதிரியான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்த விடயங்கள் தொடர்பாக அசமந்த போக்கு கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது என்றும் சங்கத்தினர் அமெரிக்கத் தூதுக்குழுவினரிடம் விவரித்தனர்.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட மதகுருமார்கள், மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மனித உரிமை மீறல்கள் உட்பட பல விடயங்கள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார்கள்.

அவர்கள் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

**மீண்டும் போர் மூண்டால் இரத்தக்களரி ஏற்படும்**

யாழ்ப்பாணத்தில் மீண்டும் போர் நடைபெறுமானால் பெரும் இரத்தக் களரி ஏற்படும். அவ்வாறு சண்டை நடைபெறும் இடங்களில் இருந்து குடிமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குப் புலம் பெயரவும் -

தமது உடைமைகளை எடுத்துச் செல்வதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை பயங்கரவாத நடவடிக்கை என்று கூறும் அரசாங்கத்தின் படைகளின் நடவடிக்கையால் இலங்கை காணாமற் போனோர் விடயத்தில் உலகில் 2ஆவது இடத்தை வகிக்கிறது.

அரசாங்கத்தின் கருவியான இராணுவம் தமிழர்களைக் கண்டபடி கைது செய்வதுடன் பாலியல் வல்லுறவு, சித்திரவதைகள், கொலைகள் போன்ற பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

**அரச பயங்கரவாதம் குறித்து மௌனம்**

இத்தகைய அரச பயங்கரவாதம் குறித்து உலக நாடுகள் மௌனம் சாதித்து வருகின்றன. 1996ஆம் ஆண்டு மீளக் குடியமர வந்த மக்களை வரவேற்ற இராணுவத்தினர் அதே ஆண்டு ஜுலை மாதம் முல்லைத்தீவில் இடம்பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து தமது உண்மையான முகத்தைக் காட்டத் தொடங்கினார்கள்.

இந்தக் காலத்தில் காணாமற்போனோர், கொலை செய்யப்பட்டோர், சித்திரவதை செய்யப்பட்டோர் என மனித உரிமை மீறல்கள் பட்டியல்கள் அதிகரித்தன.

அதே போன்ற ஒரு தாக்குதல் இன்னும் எங்காவது நடைபெற்றால் தம்மீது படையினர் தாக்குவார்கள் என்று மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றார்கள்.

மக்கள் சுயாதீனமாக கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய சூழல் உருவாக்கப்படுவதுடன் தமிழர்களின் மனித மாண்பும் மதிக்கப்பட வேண்டும். இப்படி அந்தச் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கப் பிரதித் தூதுவர் லுயஸ் அம்ஸ்லாம், உதவிப் பணிப்பாளர் விக்கி மூர், ஆலோசகர் வில்லியம் ஹேறா, பாதுகாப்பு ஆலோசகர் அல் டோப்பியஸ், அரசியல் ஆலோசகர் பத்மினி இராஜதுரை ஆகியோர் அமெரிக்கத் தூதரகத்தின் சார்பில் கலந்துகொண்டு பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டனர். (க-5)

## ஒன்று கூடுமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.20

இலங்கை மின்சார சபையில் பயிற்சி பெற்ற தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் அனைத்துப் பயிலுநர்களையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் ஒன்று கூடுமாறு செயலாளர் தெரிவித்துள்ளார். (க-10)

## சித்த மருத்துவ மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பல்கலைக் கழக மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது. (க-10)

## கட்டட வேலைகள் பூர்த்தி

வலிகாமம் தெற்கு,பெப்.20

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் ஈவினை கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலைய கட்டட வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

இந்தக் கட்டடம் சுகாதாரத் திணைக்களத்திடம் விரைவில் கையளிக்கப்பட உள்ளது. சுகாதாரத் திணைக்களத்திடம் கட்டடம் ஒப்படைக்கப்பட்டதும் உத்தியோக பூர்வமான ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-152)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

நல்லின கோழிக்குஞ்சுகள் மற்றும் விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.யோகராஜா, இல.02, வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். (கொனிக்கா கலர்லாப் அருகில்). (84360)

## இலக்கியக் கட்டுரைகள்

க.பொ.த.சாதாரண, உயர்தர மாணவர்கள் தமிழ் மொழியும், இலக்கியமும், நாடகமும் கற்க உதவக்கூடிய 38 கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், நாவல் எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் எழுதியிருக்கிறார் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. (84000)

## தவறிவிட்டது

கைச்செயின் ஒன்று 02.02.2001 வெள்ளிக்கிழமை அன்று கஸ்டிச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கஸ்டிச் சந்தியில் உள்ள வேள்ஸ்ட் கொமினிகேசனில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
**T.P.021-2188** (84287)

## கடை வாடகைக்கு

கந்தர்மடம், அரசடி வீதியில் கடைத் தளபாடங்களுடன் கடை வாடகைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். க.சிவராஜா 117, அரசடி வீதி, கந்தர்மடம். (84317)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நட்சத்திரம் பூசம், 5 இல் செவ்வாய், உயரம் 5' 8", 34 வயதுடைய கனடாவில் பிரஜா உரிமை பெற்ற எலக்ரோணிக் பொறியியலாளருக்கு 27-30 வயதுக்குட்பட்ட சிவந்த, அழகிய, பட்டதாரி மண மகள் தேவை. ஸ்பொன்சர் உண்டு. விள. இல.1217, மே/பா உதயன். (84311)

## கடைகள் விற்பனைக்கு

யாழ்.நகரில் பிரபல்யமான வீதியில் கேந்திர முக்கியத்துவமான இடத்தில் கடைகள் (காணியுடன்) விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்க: விள.இல. 1219, மே/பா. உதயன். (84358)

## ஆங்கிலக் கல்வி

இலகுவான முறையில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன் கற்பிக்கப்படும். தனிப் பட்ட முறையில் வீடுகளிற்கு வந்து கற்பிக்க முடியும். தொடர்பு: இ.தேவதாஸ், **No.231,** கோயில் வீதி, நல்லூர்.

(84359)

## விற்பனைக்கு

97, கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரியில் 6 பரப்புக் காணி வீட்டுடனும், 195, கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரியில் 3 பரப்புக் காணி மாடிவீட்டுடனும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: **N.** சத்தியரூபன், 354, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/15361)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். அண்ணா, ஸ்ரேஷன் றோட், இணுவில்.

**(C/15146)**

புரதம், கனிப்பொருள்கள், விற்றமின்கள் அடங்கிய சிப்பிக் காளான் விற்பனைக்கு உண்டு. (கொழுப்பு, மாப்பொருள் அற்ற தாவர உணவு) தொடர்பு: க.தங்கராஜசிங்கம், 976, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(84362)

## வீடு தேவை

நான்கு அங்கத்தவர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு வண்ணார்பண்ணை, கொக்குவில் பகுதிகளில் வாடகைக்கு வீடு தேவை. முற்பணம், வாடகை விவரங்களுடன் அறியத்தரவும். விள.இல. 1218, மே/பா. உதயன்.

(84345)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா **350/-**) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081.

**(C/15377)**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்
04
-
05
-
1917



இறைவன் அடியில்
22
-
01
-
2001

அமரர்

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது தந்தையார் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், முன்னின்று உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20. 02. 2001) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் நுணாவில் குளக்கோட்டு விநாயக ஆலயச் சுற்றாடலிலும், சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (21. 02. 2001) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் அனைவரையும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.**

*தற்காலிக முகவரி:*
*க. சிதம்பரநாதன்,*
*செங்குந்தார் வீதி,*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

*நிரந்தர முகவரி:*
*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.*

(84366)

## நயினையில் சிவராத்திரி விசேட பூசை

யாழ்ப்பாணம்,பெப்.20

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் சிவராத்திரி பூசைகள் நாளை சிறப்பாக நடைபெறவுள்ளன.

முதல் சாமத்தில் 9 கும்ப நமன அபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து இரண்டாம் சாமம் 108 கலச அபிஷேகமும், மூன்றாம் சாமம் 49 கலச அபிஷேகமும் நான்காம் சாமம் 25 கலச அபிஷேகமும் இடம்பெறும். மறுநாள் காலை சமுத்திர தீர்த்தம் நடைபெறும். கோப்பாயைச் சேர்ந்த சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் பூசைகளை நடத்துவார்.

விசேட நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஐ)

## நெல்லியடியில் தையல் பயிற்சி

தென்மராட்சி,பெப்.20

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையும், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கமும் இணைந்து மகளிர்களுக்கான இலவச தையல் பயிற்சியை விரைவில் நெல்லியடியில் ஆரம்பிக்கவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் யுவதிகள் எதிர் வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## குருநகர் வி.க. சம்பியன்

குருநகர்,பெப்.20

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

கடந்த 15ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் குருநகர் விளையாட்டுக் கழகம், அரியாலை ஜெட்லயனர்ஸ் விளையாட்டுக் கழகத்தை 5 - 0 கோல்களால் வென்றது. (க-51)

## வதிரி ஆலயத்தில் திருட்டு

நெல்லியடி,பெப்.20

ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த சமயம் வதிரியில் ஆலயம் ஒன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலி பெருக்கி சாதனங்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் அண்மையில் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது. இது குறித்து ஆலய பரிபாலன சபையினர் நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர்.

(க-109)

## தென்மராட்சிக்கு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்

தென்மராட்சி,பெப்.20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு 39 பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வலய அலுவலக தாபனப் பிரிவில் உள்ளன என்றும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(க-117)

## கபடிப் போட்டியில் வெற்றி

வலி.வடக்கு,பெப்.20

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற கபடிப் போட்டிகளில் -

ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அரியாலை காந்தி விளையாட்டுக் கழகமும், இரண்டாம் இடத்தை கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும், இரண்டாம் இடத்தை திருநெல்வேலி கலாமன்ற விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன. (க-86)

## கசிப்பு ஒழிப்புப் பிரசாரம்

குருநகர், பெப்.20

குருநகர்ப் பகுதியில் கசிப்பு வியாபாரம், கசிப்பு குடித்தல் ஆகிய செயற்பாடுகளை இல்லாது ஒழிக்கவும் இப்பகுதி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் யாழ்.அகவொளி நிலையம் குருநகர்ப் பகுதியில் கசிப்பு ஒழிப்பு பிரசாரங்களை நடத்தி வருகிறது. (க-51)

# ஆளுங்கட்சி எம்.பிக்களின் வெளிநாட்டுப் பயணங்கள் ரத்து

கொழும்பு,பெப்.20

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மார்ச் 12ஆம் திகதி முதல் ஏப்ரல் 8ஆம் திகதி வரை எவ்விதமான வெளிநாட்டுப் பயணங்களையும் மேற்கொள்ள வேண்டாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இக் காலப்பகுதியில் அவசரமாக வெளிநாட்டுக்குச் செல்லத் தேவை ஏற்பட்டால், ஜனாதிபதியின் விசேட அனுமதியைப் பெற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சியின் இரண்டாவது பதவிக் காலத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்ட விவாதம் இக் காலப் பகுதியில் நடைபெற இருப்பதாலேயே இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. (க)

# கண்ணீர் அஞ்சலி

**Dr.கந்தையா பாலசிங்கம் R.M.O.**

(பிரசன்னா வைத்தியசாலை, கச்சேரியடி)

"ஓ மரணமே உனக்குத்தான் எத்தனை கோடி உருவங்கள்"

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கச்சேரியடியை வசிப்பிடமாகக் கொண்டவரும் எமது குடும்ப நண்பருமாகிய

**Dr.கந்தையா பாலசிங்கம் (ஓய்வுபெற்ற R.M.O.)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது மனைவி, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**க.தம்பியையா குடும்பத்தினர்.**

*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

(84367)

# மரண அறிவித்தல்கள்

## Dr.கந்தையா பாலசிங்கம் (R.M.O.)

(பிரசன்னா வைத்திய நிலையம், கச்சேரியடி, யாழ்ப்பாணம்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் (ஓய்வுபெற்ற **R.M.O.**) அவர்கள் 2001.02.15 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துமாணிக்கம் ஆகியோரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னபிள்ளை ஆகியோரின் மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், பிரசன்னா (மாணவன், திறந்த பல்கலைக்கழகம், உயர் தொழில்நுட்பக் கல்லூரி), பிரசாந்தன் (2000 உயிரியல் பிரிவு மாணவன், சென்ஜோன்ஸ் கல்லூரி), பிரியந்தா (2001 கணிதப் பிரிவு மாணவன், சென்ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்றவரான திருமதி இராசதுரை கனகாம்பிகை மற்றும் திருமதி குணரட்ணம் நாகேஸ்வரி, திருமதி சோமசேகரம் மகேஸ்வரி (கொழும்பு), க.மயில்வாகனம் (மாவட்ட முகாமையாளர், வீடமைப்புத் திணைக்களம், திருகோணமலை), திருமதி பத்மநாதன் புவனேஸ்வரி (திருகோணமலை) ஆகியோரின் அன்புமிகு சகோதரரும், சி.சிவகுருநாதன், சி.சதாசிவம் சி.சிவஞானம் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், யாழ்.போதனா வைத்தியசாலை), காலஞ்சென்றவரான சி.பாலசுப்பிரமணியம், சி.கிருஷ்ணபிள்ளை (பிரதேச செயலகம், உடுவில்), சி.ஜெகநாதன் (முரசுமோட்டை), சி.குகநாதன் (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (2001.02.20) செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
- குடும்பத்தினர்.

முகவரி:
*பிரசன்னா வைத்திய நிலையம்,*
*15, பேரின்பநாயகம் ஒழுங்கை,*
*கச்சேரியடி, யாழ்ப்பாணம்.*

(84343)

## முருகேசு கந்தசாமி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு இராஜவீதியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான முருகேசு கந்தசாமி நேற்று முன்தினம் (18-02-2001) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சிவகாமி தம்பதியினரின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், றதிவதனா(கனடா), காலஞ்சென்ற றஜீந்திரன், யோகேந்திரன்(கனடா), சுரேந்திரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனடாவில் வசிப்பவர்களான பிறேம், டயாறூபி, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பஞ்சலிங்கம், நமசிவாயம், மீனாட்சி, சண்முகம் மற்றும் இராசரத்தினம் (புத்தளம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கனடாவில் வசிக்கும் அபிராமி, ஜனார்த்தனன், றெயீசன், அருணியா, கிர்சான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-02-2001) செவ்வாய்க் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
திருமதி நடராஜா யோகராணி,
திருமதி பரந்தாமன் இந்திராணி (பேபி).
(மைத்துனிமார்)
M.பாலசுப்பிரமணியம் குடும்பம்.
(மருமகன்)

*இராஜ வீதி,*
*கல்வியங்காடு.*

*உரும்பிராய் கிழக்கு,*
*சிவன் வீதி,*
*உரும்பிராய்.*

(84361)

# அமெரிக்க, இஸ்ரேலியப் படைகள் இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சி

## மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரிப்பு

டெல்அவிவ், பெப். 20

இஸ்ரேலிய, அமெரிக்கப் படைகள் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இதனால் மத்திய கிழக்கில் நிலவும் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

நேற்றுத் தொடங்கிய இந்தக் கூட்டுப் பயிற்சி எதிர் வரும் வெள்ளிக்கிழமை வரை தொடரும் என்றும் —

'பலஸ்டிக்' ரக ஏவுகணைகள் பயிற்சியின் போது பரிசீலிக்கப்படும் என்றும் —

அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்.

வான் வெளித்தாக்குதல் கட்டுப்பாட்டுப் பாதுகாப்பு முறைகள் சரியாக இயங்குவதை உறுதிசெய்யவே கூட்டு இராணுவப் பயிற்சி நடத்தப்படுவதாக இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கடந்த வாரம் ஈராக் மீது அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் நடத்திய வான் தாக்குதலால் பதற்ற மடைந்துள்ள மத்திய கிழக்குப் பகுதியில், அமெரிக்க, இஸ்ரேல் கூட்டு இராணுவப் பயிற்சி மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வளைகுடா யுத்தத்தின் போது ஈராக்கின் மீது 'பலஸ்டிக்' ஏவுகணைகள் ஏவப்பட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஈராக் 'ஸ்கட்' ஏவுகணைகள் மூலம் பதில் தாக்குதல் நடத்தியது.

இத்தகைய பரஸ்பர ஏவுகணைத் தாக்குதல்களால் வளைகுடாப் போரின் போது அதிக சேதங்கள் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஓ-7-ரி)

## தனது முகச்சாயல் இல்லாததால் மகனைக் கொன்ற தந்தைக்கு தமிழகத்தில் ஆயுள் தண்டனை

சென்னை, பெப். 20

தமிழகத்தில் தன்னைப் போல் முகச்சாயல் இல்லாத மகனை கொலை செய்த தந்தைக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

சென்னையைச் சேர்ந்த 55 வயதான பலராமன் என்பவரின் மனைவிக்கு கடந்த 87 ஆம் ஆண்டு ஆண் குழந்தை பிறந்தது.

பிறந்த குழந்தையைப் பார்க்க வந்த பலராமனின் உறவினர்கள் சிலர் குழந்தையின் முகம் தந்தை பலராமனின் சாயலில் இருக்கவில்லை என்று கூறினர்.

இதனால் மனமுடைந்த பலராமன் தனது மனைவி மீது சந்தேகப்பட்டார்.

இதனால் தொட்டிலில் கிடந்த குழந்தையை எடுத்துச் சென்ற பலராமன் அதன் கழுத்தை நெரித்து கொன்று சடலத்தை சைதாப்பேட்டை ஆற்றில் வீசினார்.

இந்தக் கொடூரச்சம்பவம் தொடர்பாக பொலீஸார் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த கீழ் நீதிமன்றம் பலராமனுக்கு ஆயுள் தண்டனை விதித்தது.

இதனை எதிர்த்து பலராமன் மேன்முறையீடு செய்தார். மேன்முறையீட்டில் தற்போது ஆயுள் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

(ஓ)

## பிரேசில் சிறைகளில் கலவரம்; 250 பொதுமக்கள் பணயம்!

பிரேசிலியா, பெப். 20

பிரேசிலில் கலவரத்தில் ஈடுபட்ட சிறைக் கைதிகள் சுமார் 250 பொது மக்களை பணயக் கைதிகளாகப்பிடித்து வைத்துள்ளனர்.

சௌபோவா மாகாணத்தில் உள்ள 19 சிறைச்சாலைகளில் இருந்த கைதிகளே நேற்று முன்தினம் ஒரே சமயத்தில் கலகத்தில் ஈடுபட்டனர்.

சிறை அறைகளுக்குத் தீ வைத்த கைதிகள் காவலர்களுடன் மோதல்களிலும் ஈடுபட்டனர்.

காவலர்களுக்கும்கைதிகளுக்கும் இடையேயான மோதல்கள் காரணமாக சிறைச்சாலைகளில்இரத்தக்கறைகள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

கரண்டரோ சிறைச்சாலையில், கைதிகளைச் சந்திக்க வந்த அவர்களது உறவினர்களில் சுமார் 250 பேரைக் கலகத்தில் ஈடுபட்டவர்கள் சிறைச்சாலைக் கட்டடத்துக்குள் இழுத்துச் சென்று பணயக் கைதிகளாக வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து தமது உறவினர்களை விடுவிக்கக் கோரிய கைதிகளுக்கும், பணயம் வைத்தவர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஓ-7-ரி)

## இந்தியாவில் வட்டி வீதம் குறைப்பு

இந்தியவர்த்தக வங்கிகளின் வட்டி வீதத்தை ரிசேர்வ்வங்கி அரை சதவீதத்தால் குறைத்துள்ளது. வங்கிகளின் ரொக்கக்கையிருப்பு வீதமும் அரைச் சத வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மற்றும் உள்நாட்டு நிதிச் சந்தையில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்து எடுக்கப்பட்ட இந்த முடிவு கடந்த 16 ஆம் திகதி மாலையில் இருந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது.

(ஓ)

## அமெரிக்காவில் விபத்தினால் கையை இழந்த தொழிலாளிக்கு மாற்றுக் கை பொருத்தப்பட்டது

வாஷிங்ரன், பெப். 20

அமெரிக்காவில் பட்டாசு வெடி விபத்தில் இடது கையை இழந்த தொழிலாளிக்கு மற்றொருவரின் கை பொருத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தக் கை மாற்றுச் சத்திர சிகிச்சை 13 மணித்தியாலங்கள் நீடித்தது.

18 நிபுணர்களைக் கொண்ட குழு இந்தச் சத்திர சிகிச்சையை மேற்கொண்டது.

6 மாதங்களில் மாற்றுக் கை பொருத்தப்பட்ட தொழிலாளி, அந்தக் கையைக் கொண்டு வழமையான பணிகளைச் செய்ய முடியும் என்று மருத்துவர்கள் கூறினர்.

இரு வருடங்களின் முன்னர் அமெரிக்காவில் முதலாவது கை மாற்று சத்திர சிகிச்சையைச் செய்த குழுவே தற்போதும் சிகிச்சையை நடத்தியது.

(ஓ—5—6—7)

## ஈராக் மீதான ஐ.நாவின் தடை தன்னிச்சையான செயலாம்

### குறை கூறுகிறார் வாஜ்பாய்

மும்பை, பெப். 20

ஈராக் மீதான வான் தடை, தன்னிச்சையான முடிவு என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் குறை கூறியுள்ளார்.



மும்பையில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

ஈராக்கின் வான் பரப்பில் ஒரு பகுதி அந்த நாட்டு விமானங்கள் பறக்கக் கூடாத சூனியப் பிரதேசமாக அறிவித்தது தன்னிச்சையான செயல். இது ஐ.நா. விதிகளுக்குப் புறம்பானது! இதனை இந்தியா ஏற்கவில்லை.

பாக்தாத் மீது அமெரிக்க, பிரிட்டிஷ் போர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்கள் அப்பாவி மக்களுக்குத் துன்பம் விளைவிக்கும்.

ஈராக்குக்கு எதிராக ஐ. நா. பாதுகாப்புச் சபை விதித்துள்ள தடைகளை அகற்றுவதே, ஈராக்கை சர்வதேச நீரோட்டத்துக்கு கொண்டு வரும்.

இவ்வாறு பிரதமர் வாஜ்பாய் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழக சட்டமன்றத் தேர்தலில் 'பூஜ்ஜியமும் ராஜ்ஜியமும்'

### கருணாநிதியின் சுவையான பதில்

எதிர்வரும் தமிழக சட்ட சபைத் தேர்தலில் யாருக்கு பூஜ்ஜியம்; யாருக்கு ராஜ்ஜியம் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள் என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

'தி.மு.க. கூட்டணி எதிர்வரும் தேர்தலில் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறாது' என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறியிருப்பது குறித்து செய்தியாளர்கள் கேட்டபோதே கருணாநிதி இவ்வாறு பதிலளித்தார்.

தி.மு.கவுடன் தேர்தல் கூட்டணி வைப்பது தொடர்பாக தமிழ் மாநில காங்கிரஸ் இணைப் பொதுச் செயலாளர் அழகிரியுடன் தி.மு.கவின் மூத்த தலைவரும் தமிழக சட்டப் பேரவைத் தலைவருமான பி.ரி.ஆர் பழனிவேல் ராஜன் பேச்சு நடத்தி வருவதாகவும் கருணாநிதி அப்போது தெரிவித்தார்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவுடன் கூட்டணி அமைத்திருந்த த.மா.காவுக்கு 40 தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அதனைவிட அதிக தொகுதிகளை தற்போது த.மா.கா. எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

(ஓ-7-ரி)

## உலக அரங்கில்

### அட்லாண்டா பூமிக்குத் திரும்பியது

நாஸா, பெப். 20

அமெரிக்க விண் ஓடமான ''அட்லாண்டா'' 11 நாள்கள் விண்வெளிப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று இகனடி விண் ஆய்வு நிலையத்தில் தரையிறங்கியது.

100 கோடி டொலர்கள் செலவில் உருவாக்கப்பட்ட விண் ஆய்வுமையமான 'டெஸ்டினி'யைசர்வதேசவிண்வெளி நிலையத்துக்கு எடுத்துச் சென்று நிறுவிய பின்னர் 'அட்லாண்டா' பூமிக்குத் திரும்பியுள்ளது.

(ஓ)

## மலேசிய விமான நிலையம் அருகே உணவுக்காகக் கடத்தப்பட்ட 1,100 பாம்புகள் மீட்கப்பட்டன!

மலேசியாவில் கோலாலம்பூர் விமான நிலையம் அருகே சாக்குகளில் கட்டி எடுத்துச் செல்லப்பட்ட ஆயிரத்து 100 பாம்புகளை வனத்துறை அதிகாரிகள் கைப்பற்றிக் காப்பாற்றியுள்ளனர்.

இந்தப் பாம்புகளின் இறைச்சி மருத்துவ குணங்களைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுவதால், இவை உணவுக்காகக் கிழக்காசிய நாடுகளுக்கு கடத்தி எடுத்துச் செல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மலேசியா உட்பட பல நாடுகளில் பாம்பு இறைச்சி விற்பதற்கு அனுமதி உள்ளது.

ஆனால் சாக்குகளில் கட்டி லொறி மூலம் எடுத்துவரப்பட்ட 'பாம்பு மூட்டைகள்' சரக்கு அனுமதிப்பத்திரம் இல்லாததாலேயே அதிகாரிகளால் கைப்பற்றப் பட்டதாக கூறப்படுகிறது.

அனுமதியின்றிப் பாம்புகளைக் கடத்தியதற்காகக் லொறி ஓட்டுநர் உட்பட 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ஓ)

## கடலில் இறக்கும் தறுவாயில் காப்பாற்றப்பட்ட 900 குர்திஷ் இனத்தவருக்கு பிரான்ஸில் அரசியல் தஞ்சம்

பாரிஸ், பெப். 20

பிரான்ஸின் ரிவெய்ரா கடற்பகுதியில் தரை தட்டிய கப்பலில் இருந்து காப்பாற்றப்பட்ட 300 குழந்தைகள் உட்பட 900 பேருக்கும் அரசியல் தஞ்சம் வழங்குவதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகப் பிரான்ஸ் அரசு தெரிவித்துள்ளது,

துருக்கியில் இருந்து கடந்த 10 ஆம் திகதி 900 குர்திஷ் இனத்தவர்கள் ஏதேனும் ஒரு ஐரோப்பிய நாட்டுக்குக் கொண்டு சென்று சேர்ப்பதாக உறுதியளித்து அழைத்து வரப்பட்டனர்.

கம்போடியாவைச் சேர்ந்த 'ஈஸ்ட்சீ' என்ற சரக்குக் கப்பலில் ஆடு, மாடுகளை அடைப்பது போல் இவர்கள் அடைக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டனர்.

இத்தனைக்கும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் பயணக் கட்டணமாகக் கணிசமான தொகை மாலுமிகள் குழுவினால் அறவிடப்பட்டது.

இவர்கள் வந்த கப்பல் கடந்த சனிக்கிழமை பிரான்ஸின் கடல் பகுதியில் கடற்பாறைகளில் மோதி மூழ்கத் தொடங்கியதையடுத்து, 900 பேரையும் நிர்க்கதியாக விட்டுவிட்டு மாலுமிகள் தப்பித்தனர்.

அதிர்ஷ்டவசமாக, பிரான்ஸ் அதிகாரிகளால் மீட்கப்பட்ட குர்திஷ் இனத்தவர்கள் தற்போது பிரான்ஸில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்க பிரான்ஸ் ஆராய்ந்து வருகிறது.

ஈராக் மற்றும் துருக்கியில் குர்திஷ் இன மக்கள் தனி நாடு கோரிப் போராடி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஓ)

## பிலிப்பைன்ஸில் கடும் மழைக்கு 16 பேர் பலி!

மணிலா, பெப். 20

பிலிப்பைன்ஸில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்ட மண் சரிவுகளில் சிக்கி 16 பேர் இறந்தனர்.

மத்திய மற்றும் தென் பகுதியில் நிகழ்ந்த இந்தப் பேரழிவால் ஒரு லட்சம் மக்கள் வீடுகளை இழந்து நிர்க்கதியாகி உள்ளனர்.

(ஓ)

### அண்மையில் தப்பியோடிய

# இருபாலை 'கானான்' நிலைய சிறுவன் திரும்பிவிட்டான்

யாழ்ப்பாணம், பெப். 20

இருபாலையில் உள்ள கானான் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு நன்னடத்தைப் பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்பட்ட சமயம் அங்கிருந்து தப்பியோடிய சிறுவன் மீண்டும் அங்கு வந்து சேர்ந்துள்ளான்.

திருட்டுச் சம்பவம் ஒன்றில் குற்றவாளியாகக் காணப்பட்ட சிவலிங்கம் சிறிஸ்கந்தராஜா என்ற சிறுவனை யாழ். நீதிமன்றம் நன்னடத்தைப் பயிற்சி பெறுவதற்காகக் கானான் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு அனுப்பி இருந்தது.

இந்தச் சிறுவன் கடந்த 8 ஆம் திகதி அங்கிருந்து தப்பிச் சென்றதை அடுத்து யாழ். நீதிமன்றம் அந்தச் சிறுவனைக் கைது செய்யுமாறு கோப்பாய் பொலீஸார் ஊடாகப் பிடியாணை பிறப்பித்திருந்தது.

பிரஸ்தாப சிறுவன் நேற்று முன்தினம் மீண்டும் கானான் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு வந்து சேர்ந்துள்ளதாக யாழ். நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6-5)

## ஆனைக்கோட்டையில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், பெப். 20

ஆனைக்கோட்டை உயரப்புலம்பகுதியில் நேற்றுக்காலை 10 மணியளவில் இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த தேவதாசன் சுகேந்திரன் (வயது 21) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

இவரது கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.கிளை அலுவலகத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-5)

### நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின்

# தற்காலிக பணியாளர்களுக்கு இடர்கால கொடுப்பனவு இல்லை

அரியாலை, பெப். 20

நல்லூர் ப. நோ. கூ. சங்கம், பணியாளர்களுக்கு வழங்கி வரும் மாதாந்த இடர்காலக் கொடுப்பனவு, சங்கத்தில் பணியாற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது

அதேசமயம் குடாநாட்டில் அநேகமான ப. நோ. கூ. சங்கங்கள் இடர்காலக் கொடுப்பனவை நிரந்தர, மற்றும் தற்காலிக ஊழியர்களுக்கும் வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-17)


## நல்லூர் வணிகர் கழக புதிய நிர்வாக சபை

18-02-2001 இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நல்லூர் வணிகர் கழகத்திற்கு பின்வருவோர் தெரிவாகியிருக்கிறார்கள் என்பதை அறியத்தருகிறேன்.

தலைவர்: நா. எழில்மோகன்
செயலாளர்: மு. கணேஷ்
பொருளாளர்: செ. திருப்பதி
உபதலைவர்: அருணகிரிநாதன்
உபசெயலாளர்: சிவகுமார்

நிர்வாக சபை உறுப்பினர்கள்

1) சூரியகுமார்
2) கிருஷ்னானந்தமூர்த்தி
3) சந்திரன்
4) சிவா
5) ஜெயசீலன்
6) ஜெயரூபன்
7) ராஜரட்னம்
8) ரட்ணசிங்கம்
9) ராசேந்திரம்
10) குணபாலன்

மு கணேஷ்
செயலாளர்,
நல்லூர் வணிகர் கழகம்

(84384)



## நன்றி நவில்கின்றோம்

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த பாடசாலைகள் மீளவும் இயங்க விரைந்து செயற்பட்டு உதவிய

கௌரவ அமைச்சர்
உயர்திரு கே.என். டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்
உயர்திரு க.வே. குகேந்திரன்,
உயர்திரு எஸ். தவராசா ஆகியோரையும்

பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன்
அவர்களையும்

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
உயர்திரு கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை
அவர்களையும்

பாராட்டி எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

வடமராட்சி கிழக்கு
இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம்.

(சி/15383)


# தோட்டத்தொழிலாளர் சம்பள உயர்வு கோரிக்கை குறித்து முடிவு இல்லை

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை நானூறு ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என்று இ. தொ. கா. முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட மாநாட்டில் ஆராயப்பட்ட போதும் இவ்விடயம் குறித்து இணக்க நிலை ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், இ. தொ. கா. நாடாளுமன்ற உறுப்பினர்களான யோகராஜன், முத்துசிவலிங்கம்ஆகியோரும் தோட்ட முதலாளிமார் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தோட்டங்களில் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் இப்போதைக்கு சம்பள உயர்வு வழங்க முடியாது என்று தோட்ட முதலாளிமார் தெரிவித்தனர்.

உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெரும் லாபம் கிடைப்பததால் சம்பள உயர்வு வழங்கலாம் என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்

இரு தரப்புக்கும் இடையில் இணக்க நிலை ஏற்படாததை அடுத்து சம்பளப் பிரச்சினை பற்றி ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பான முடிவைக் குழு சமர்ப்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அதேசமயம் —

சம்பள உயர்வு கோரி இ. தொ. கா ஏற்பாடு செய்திருந்த சத்தியாக்கிரகப் போராட்டம் திட்டமிட்டபடி நேற்று ஹட்டனில் ஆரம்பமாகியுள்ளது. (உ-3)

## பிணை அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து திருட்டுத்தனமாகக் கூரைமரங்கள், மற்றும் ஜன்னல்கள், கதவுகள் ஏற்றும் போது கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் நான்கு சந்தேக நபர்களும் நேற்று யாழ் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்நடவடிக்கையின் போது பொலீஸாரினால் கைப் பற்றப்பட்ட இரு லொறிகளையும் தலா ஒருலட்சம் ரூபா பிணைமுறியில் உரிமையாளர்களிடம் ஒப்படைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டவர்களான சுப்பிரமணியம் பரமேஸ்வரி (யாழ்ப்பாணம்), துரைராசா பிரேமகுமார் (கொட்டடி), வரப்பிரகாசம் சந்திரசேகரம் (கொட்டடி), நாகபாலன் நகுலேஸ்வரன் (யாழ்ப்பாணம்) ஆகியோர் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை தலா 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. (உ-5-6)

## ஆசிரியருக்கு கட்புல சாதன கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 20

வரலாறும் சமூகக்கல்வியும் ஆசிரியர்களுக்கான வலய மட்ட கட்புல சாதனங்கள் போட்டியும் கண்காட்சியும் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர் ஸ்தான சி. சி. த. க பாடசாலையில் நடைபெறவுள்ளன.

ஆசிரியர்களின் கட்புல சாதனங்கள் அனைத்தும் வரலாறும் சமூகக்கல்வியும் பாடத்துடன் தொடர்புடையதாகவும் —

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளுக்கு உகந்ததாக இருப்பதுடன் நீண்டகாலப் பயன்பாடு உடையதாகவும் இருக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வரலாறும் சமூகக்கல்வியும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார். கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கட்புல சாதனங்கள் மட்டுமே வலய மட்டப் போட்டியில் காட்சிப் படுத்தப்பட்டுத் தெரிவுகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10-ரி)

# கோண்டாவிலில் நேற்று இரு விபத்துச் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், பெப். 20

கோண்டாவில் பகுதியில் நேற்றுக் காலையும் பிற்பகலிலும் இடம்பெற்ற இருவேறு விபத்துச் சம்பவங்களில் பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட 4 பேர் படுகாயமடைந்தனர்.

கோண்டாவில் சந்தியில் நேற்றுக் காலை 7-30 மணியளவில் இடம்பெற்ற கார் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற யாழ் இந்துக் கல்லூரி தரம் 9 மாணவன் சின்னராசா நிரோஷன் (வயது 14) இடதுகால் முறிந்த நிலையிலும் அவருடன் சைக்கிளில் சென்ற சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி தரம் 5 மாணவியான செல்வி செல்வநாதன் கௌதமி (வயது 10) என்பவர் காயமடைந்தும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

கோண்டாவில் ரயில் நிலையத்தடியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த திருச்செல்வம் விஜயச்சந்திரன் (வயது 22), ஆறுமுகம் ஜெயதாஸ் (வயது 45) ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (உ-7-6-ரி)

### குருநகர் உணவுக் களஞ்சிய வழக்கு;

# யாழ்ப்பாண நீதிமன்றத்தின் விசாரணை இடைநிறுத்தம்

குருநகர் உணவுக் களஞ்சிய திருட்டு வழக்குத் தொடர்பாக மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீதான உத்தரவு வரும் வரை யாழ். நீதிமன்றத்தில் இவ்வழக்கு நிறுத்தி வைக்கப்படுகின்றது என்று நேற்று யாழ் நீதிவான் இ. த விக்னராஜா அறிவித்தார்.

இந்த வழக்கின் மீதான விசாரணை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளமை தெரிந்ததே.

நேற்று இந்த வழக்கு யாழ் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடைக்கால உத்தரவுப் பிரதி சமர்ப்பிக்கப் பட்டது.

மேல் முறையீட்டு நீதிமன்றம் இவ்வழக்கு நடவடிக்கையை நிறுத்திவைக்குமாறு கட்டளையிட்டுள்ளதே தவிர, அக் கட்டளையில் வேறு எதுவும் குறிப்பிடப்படாத படியால் சந்தேக நபர் தொடர்பாக இம்மன்று ஏற்கனவே இட்ட கட்டளையில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை என்று நீதிவான் தெரிவித்தார். (உ-5-6)

# வல்வை நகர சபைத் தொழிலாளி கம்பியால் தாக்கப்பட்டார்

## ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கடமை நேரத்தின் போது, நகரசபை தொழிலாளி ஒருவர் இரும்புக் கம்பியினால் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இதன் எதிரொலியாக வல்வை நகர சபை ஊழியர் நேற்றுக் காலை முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம், நேற்றுக்காலை 10.00 மணியளவில் வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தொழிலாளியான — கரவெட்டி இராச கிராமத்தைச் சேர்ந்த க நாகராசா (வயது 40) என்பவரே கடமை நேரத்தின் போது இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு, மார்புப் பகுதியில் படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-109)

# முன்பள்ளிகளின் விவரங்களை ஒப்படைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப் 20

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட நல்லூர் யாழ்ப்பாணம், கோப்பாய்க் கோட்டங்களில் உள்ள முன்பள்ளி பாடசாலைகள் தமது விவரங்களை யாழ்ப்பாண வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாகப்பதிய வேண்டிய பாடசாலைகளின் விவரம். தனித்தனியே 4வயது, 5 வயது மாணவர்களின் எண்ணிக்கை, முன்பள்ளி நடத்தும் நிறுவனங்களும் அவை நடத்தும் முன்பள்ளிப் பாடசாலைகளின் விவரங்கள் ஆகிய மூன்று விடயங்களையும்—

இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பாகச் சமர்ப்பிக்குமாறு யாழ் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் கேட்டுள்ளார். (க-ரி)

# வலய கல்விப் பணிப்பாளர்கள் கொழும்புக்கு அழைப்பு

## கல்வி அமைச்சில் வியாழன் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.மாவட்டக் கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்வதற்கென யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 5 வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இசுறுபாயவில் உள்ள கல்வியமைச்சில் இந்தக் கூட்டம் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்விச் செயலாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். மாவட்டக் கல்வி அபிவிருத்தி தொடர்பாக நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(க-10-ரி)

# யாழ். கல்வியியல் கல்லூரி; ஆங்கில நெறிக்கு 12 பேர் அனுமதி

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு ஆங்கில பாடநெறிக்கென 12 பேருக்கு அனுமதி கிடைத்துள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளுடனும் மற்றும் உரிய ஆயத்தங்களுடனும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி கல்வியியற் கல்லூரிக்குச் சமுகந் தருமாறு பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

அனுமதி கிடைத்துள்ள 12 பேரின் பெயர், விவரங்கள் வருமாறு:-

பி.பிருந்தா(நீர்வேலி வடக்கு), எஸ். கவிதா(சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை), ஆர்.கலைவாணி (இளவாலை வடக்கு), வி.நாமகள்(புலோலி தெற்கு), வி.சாந்தினி(மீசாலை வடக்கு), ஜி.ஸ்ரீவித்தியா(ஓடைலேன், வண்ணார் பண்ணை) -

எஸ்.திரிவேணி(கோண்டாவில் மேற்கு), கே.குமரன்(அல்வாய் கிழக்கு), எஸ்ஜசிந்தா(புதிய கொலனி, பாஷையூர்), எம்.சி.என்.சாந்தி (உரும்பிராய் தெற்கு), ஆர்.துஷாந்தினி (வளாகவீதி, திருநெல்வேலி), எம்.பிரபாகரன்(ஆடியபாதம் வீதி).

(க-10)

# குருநகர் மீனவரின் படகுகள் மீளளிப்பு

குருநகர்,பெப்.20

கடந்த 10 ஆம் திகதி குடாக் கடலில் வைத்து கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட குருநகர் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் நேற்று மண்டைதீவுப் பகுதியில் வைத்து மீண்டும் மீனவர்களிடம் கையளிக்கப்பட்டன.

எட்டு மீன்பிடிப்படகுகள், 5 லட்சம் ரூபா பெறுமதியான வலைகள், 35 மீனவர்களின் மீன்பிடி அனுமதிப் பத்திரங்கள் என்பனவே இவ்வாறு கையளிக்கப்பட்டன என குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது.

மேற்படி உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டமை குறித்து தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தாம் தொடர்பு கொண்டதாகவும்-

அவர் அது குறித்து கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதை அடுத்து மீன்பிடி உபகரணங்கள் மீண்டும் கையளிக்கப்பட்டன எனவும் -

அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

(உ-7-51)

## மிருசுவில் படுகொலை வழக்கு

# தடயப் பொருள்கள் இரசாயன ஆய்வுக்கு!

## நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம்,பெப்.20

மிருசுவில் வடக்கில் வெட்டிப் படு கொலை செய்யப்பட்ட எட்டு பொதுமக்களின் சடலங்கள் புதைகுழி ஒன்றில் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைப்பற்றப்பட்ட தடயப் பொருளகளை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்புமாறு சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர் நேற்று உத்தரவிட்டார்.

பருத்தித்துறையில் இயங்கும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம், இந்தச் சம்பவம் தொடர்பாக மீட்கப்பட்ட உடுப்புக்கள், சைக்கிள்கள் மற்றும் ஏனைய பொருடள்களைப் பொலீஸார் சமர்ப்பித்தனர்.

புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டவர்களின் உடுப்புக்கள், கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினர் சம்வதினம் அணிந்திருந்த உடுப்புகள், அங்கு மீட்கப்பட்ட சாக்குகள் ஆகியவற்றை இரசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக அரச பகுப்பாய்வுத் திணைகளத்துக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள படையினரை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும் படியும் உத்தரவிடப்பட்டது. (உ-3)


**சென்ஜோன்ஸ் கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம்**

எமது கல்லூரியில் உப அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெறும்

**திரு.க.கணேசலிங்கம் அவர்களின்**

*சேவை நலன் பாராட்டு விழாவும், விருந்துபசாரமும்*

*இடம்:* சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
*காலம்:* 24.02.2001 சனிக்கிழமை பிற்பகல் 12.30 (S.L.T.)

சிறப்பிக்க விரும்பும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் 23.02.2001 வெள்ளிக்கிழமைக்கு முன் கல்லூரியின் பொருளாளருடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

(C/15385)


# பயிற்சி முகாம்கள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.20

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டிலான உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட பயிற்சி முகாம்கள் நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் இந்தப் பயிற்சி முகாம்களை ஆரம்பித்து வைப்பார்.

இந்தப் பயிற்சி முகாம்களை நடத்துவதற்காக மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளரும் நிகழ்ச்சித் திட்டமிடல் அலுவலரும் யாழ்.வந்துள்ளனர்.

(உ-3)

# மின் விசிறி வெட்டி நாதஸ்வரக் கலைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம்,பெப்.20

கலியாண வீட்டுப் பந்தலில் பூட்டியிருந்த மின்விசிறி வெட்டி ஒருவர் தலையில் படுகாயமடைந்தார்.

ஸ்ரான்லி வீதி - இராசாவின் தோட்டம் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாதஸ்வரம் வாசித்துக்கொண்டிருந்தவரான - நாச்சிமார் கோயிலடிப் பகுதியைச் சேர்ந்த - சண்முகநாதன் சந்திரகுமார் (வயது 18) என்ற இளைஞரே படுகாயமடைந்தார்.

பந்தலில் பதிவாகக் கட்டப்பட்டிருந்த மின்விசிறிக்குக் கீழே அமர்ந்திருந்து நாதஸ்வரம் வாசித்து விட்டு எழுந்தபோதே தலைக்கு மேல் சுற்றிக் கொண்டிருந்த மின்விசிறி அவரது தலையைப் பதம்பார்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-15)

# பெண்களுக்குத் தனியான பஸ் சேவை

கொழும்பு,பெப்.20

பெண்களுக்கான தனியான பஸ் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் தினேஸ் குணவர்த்தனா தெரிவித்தார்.

ஆண்களுடன் சேர்ந்து பெண்கள பயணம் செய்யும் போது பல சிக்கல்களைப் பெண்கள் எதிர்நோக்குவதாகப் பெண்கள் அமைப்புகள் தெரிவித்ததை அடுத்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

இந்தத் திட்டம் தொடர்பாக மாகாண அமைச்சு அதிகாரிகளுடன் தாம் ஆராய்ந்து வருவதாகவும் -

விரைவில் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் - அவர் மேலும் கூறினார்.

பெண்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்து ஆராய விசேட குழுக்களும் அமைக்கப்படவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

(உ-3)

# கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.20

இசை, நடிகமணி என்.செல்வராஜா கலாபூஷணம் விருது பெற்றமையை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கௌரவிப்பு விழாவும் கலை விழாவும் நாளை புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.உதவிப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பலரும் பாராட்டுரை நிகழ்த்துவர்.

(உ-7)


**ஸ்ரீ செல்வா சினிமா**

யாழ்ப்பாணம்

சரத்குமார், மீனா நடித்த

**ரிஷி**

புதிய CD பிரதி
காட்சிகள் 10.30, 2.30
(பழைய நேரம்)

(C/15389)



**வாழ்த்துகின்றோம்**

**உயர்திரு. தம்பையா அழகரத்தினம்**

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபராக இருந்து 2001 .02.21 ஆம் நாள் தமது அறுபதாம் அகவையை நிறைவு செய்து இளைப்பாறுகின்ற அதிபர் அவர்களைப் பல வளமும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியை மனமொழி மெய்களால் பிரார்த்திக்கின்றோம்.

ஜெயமங்களம்
கொக்குவில்

(C/15386)



**ஏக விநியோகஸ்தராக நியமனம்**

அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் உற்பத்தி செய்யப்படும் மிளகாய்த்தூள், மாசிக் கருவாடு, சோயா பின்ஸ்,பிஸ்கட் வகைகள் அனைத்துக்கும் லாலா சோப் ஸ்தாபனத்தார் ஏகவிநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

**லாலா சோப்**

அச்சுவேலி.

(C/15372)


# மரண அறிவித்தல்கள்

## சரணவணமுத்து நடராசா

(இளைப்பாறிய பரிசோதகர், கூட்டுறவுத் திணைக்களம்)

ஏழாலை மேற்கைச் சேர்ந்த சரணவணமுத்து நடராசா 17.02.2001 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கரணவாய் தெற்கைச் சேர்ந்த சீதாலட்சுமியின அன்புக் கணவரும், ஜெயந்தினி (ஜேர்மனி), றஜனி(இத்தாலி) மற்றும் காலஞ்சென்றவர்களான நந்தினி, றஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜமோகன் (ஜேர்மனி), யோகானந்தன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முன்னர் குறிப்பிட்டபடி 18-02-2001 இல் நடைபெறவில்லை. அந்த நிகழ்வு இன்று (20-02-2001) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரத நிலைய வீதி,*
*மல்லாகம்.*

(84388)

தகவல்:
திருமதி ராஜமோகன் ஜெயந்தினி
(மகள்)

## மாரிமுத்து தங்கையா

(இளைப்பாறிய ஊழியர், காங்கேசன் சீமேந்து தொழிற்சாலை)

காங்கேசன்துறையை நிரந்தர வசிப்பிடமாகவும், றக்காலேன், சுண்டிக்குளியில் வசித்தவருமாகிய மாரிமுத்து தங்கையா நேற்று (19.02.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் லோகநாயகியின் அன்புக்கணவரும், கனகாம்புசம், காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகாலஷ்மி, ஜெயவனிதா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஸ்ரீரஞ்சனின் அன்பு மாமனாரும் ஸ்ரீக்லஷ்சிகா, ஸ்ரீகோபிநாத், ஸ்ரீமேனுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.02.2001) செவ்வாய்க்கிழமை றக்கா லேனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 11 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*றக்காலேன்,*
*சுண்டிக்குளி.*

(84386)

தகவல்:
ஸ்ரீரஞ்சன்
(மருமகன்)

## ஆறுமுகம் கணபதிப்பிள்ளை துரைசிங்கம் (AKT)

(முன்னாள் பிரபல காலி வர்த்தகர்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட A.K.துரைசிங்கம்(AKT) இந்தியாவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அன்னபூரணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - தருமலட்சுமி தம்பதிகளின் மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் சுகுமாரன், சிவகுமாரன், ஜெயகுமாரி, ஜெயகுமாரன், சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் மணிமேகலாதேவி, ஜெயரதி, யோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கபிலன், மயூரன், சகானா, சர்மிலன், பிரியந், சுகந் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற இரத்தினாம்பிகை மற்றும் பாலசிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான மங்கையர்க்கரசி, A.K.சிவஞானம், பரமசிவம்(சட்டத்தரணி) மற்றும் யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, சண்முகம் மற்றும் மரகதம், விநாயகமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், இராசரத்தினம் (விஜிதா மில், தாவடி) நவரத்தினம்மா, மங்கையர்க்கரசி(ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி) சீவரத்தினம் (சரவணா ரேடர்ஸ், யாழ்.), மீனாம்பாள்(கனடா) ஆகியோரின் அத்தானாரும், மு.திருநாவுக்கரசு(இளைப்பாறிய நீதிபதி, யாழ்.), தயாளன் (கணக்காளர் - கனடா) ஆகியோரின் சகலனும் கை.சீவரத்தினம் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), லீலாவதி ஆகியோரின் தாய்மாமனும் விஸ்வநாதன் - திலகவதி தம்பதிகளின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*142, பலாலி வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

(84393)

தகவல்:
தி.சீவரத்தினம்
(சரவணா ரேடர்ஸ்)
திருமதி
ம.திருநாவுக்கரசு
(ஆசிரியை,யா.இ.ம.க)

# 4 ஆவது நாளாக பல்கலை மாணவர் மகஜரில் ஒப்பம் பெறும் வேட்டை

விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டாம் என்று பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை விடுக்கும் மகஜரில் பொதுமக்களிடம் கையொப்பம் பெறும் நடவடிக்கையை யாழ. பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தனர்.

யாழ் பல்கலைக்கழக பிரதான வாசலிலும், மருத்துவ பீட வாசலிலும் அமைக்கப்பட்டிருந்த - கையொப்பம் பெறும் - விசேட கருமபீடங்களில் பொதுமக்கள் பலரும் சுயவிருப்பத்துடன் கையெழுத்துப் பிரதிகளில் கையொப்பமிட்டனர் எனவும் -

இவ்வாறு கடந்த நான்கு தினங்களாகச் சேகரிக்கப்பட்ட கையொப்பங்கள் அடங்கிய பிரதிகள் அவ்வப்போதே பிரித்தானிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன எனவும் -

விடுதலைப் புலிகளை பிரிட்டிஷ் அரசு தடைசெய்யக் கூடாது எனக் கோரி பொதுமக்களால் தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டு தம்மிடம் ஒபடைக்கப்பட்ட கடிதங்களையும் தாம் பிரிததானிய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் -

பல்கலைக்கழக மாணவர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

நேற்றுமுன்தினம் இரண்டாவது தடவையாக கையொப்பம் பெற வடமராட்சிக்குச் சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் கடுமையாக விசாரிக்கப்பட்டதுடன், அவர்களிடமிருந்து கையொப்பப் பிரதிகள் - படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன எனவும் - செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை -

நேற்று ரெலொ அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் யாழ்.மருத்துவ பீடத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட கருமபீடத்திற்குச் சென்று கையொப்பப் பிரதிகளில் கையொப்பமிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# புலிகளைத் தடை செய்யாது விட்டால் பிரிட்டனுடன் உறவைத் துண்டியுங்கள்

## சீறுகின்றது சிஹல உறுமய

கொழும்பு,பெப்.20

பிரிட்டன் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்யாது விட்டால் இலங்கை அரசு அந்த நாட்டுடனான இராஜதந்திர உறவுகளைத் துண்டிக்க வேண்டும்.

- மேற்கண்டவாறு இலங்கை அரசைக் கோரப்போவதாக சிஹல உறுமய அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்யவேண்டும் என்று கோரி சேகரித்த பத்து லட்சம் கையொப்பங்கள் அடங்கிய மகஜரை பிரிட்டிஷ் தூதரிடம் கையளித்த பின்னர் அக்கட்சி நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

அந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டன் தடைசெய்யாவிட்டால் கொழும்பில் உள்ள அந்த நாட்டுத் தூதரகத்தின் முன்பாக மட்டுமல்லாமல் சகல நாடுகளிலும் உள்ள அவர்களது தூதரகங்கள் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

★ வட அயர்லாந்து தொடர்பாக ஏற்பட்ட இணக்கத்தை முன் மாதிரியாகக் கொண்டு இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று பிரிட்டிஷ் தூதுவர் எமக்கு ஆலோசனை வழங்கினார். "அது வேறு பிரச்சினை, எமது பிரச்சினை வேறு" என்று அவருக்குப் பதிலளித்தோம்.

★ "இலங்கையில் இயங்கும் பிரிட்டனின் அரச சார்பற்ற அமைப்புக்கள் இலங்கையின் பௌத்த மதத்தையும், சிங்கள மக்களையும் அழிக்கவே செயற்படுகின்றன. சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வே திருமலைத் துறைமுகத் தில் கண் வைத்துள்ளது" - என்று பிரிட்டிஷ் தூதரிடம் தெரிவித்தோம். ஆனால் இது பிழையான கருத்து என அவர் மறுத்தார்.

(உ-3)

### பிரிட்டனுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய சட்டத்தின் கீழ் தடைசெய்யப்படக்கூடாது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆளுங்கட்சியின் சில உறுப்பினர்களும் வலியுறுத்தினர்.

"பிரிட்டனைப் பொறுத்த வரையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது நல்ல விடயமாகும். இந்தச் சட்டம் நாட்டுக்குத் தேவைதான்.

" ஆனால் நியாயமான உரிமைகளுக்காக நீதியான போராட்டம் நடத்தும் இயங்கங்கள் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படக்கூடாது. இத்தகைய இயங்கங்கள் லண்டனில செயற்படத் தடை இருக்கக் கூடாது" - இப்படி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்து ஜக் ஸ்ரோ தெரிவித்ததாவது:-

பிரிட்டனுக்கு அச்சுறுத்தலாகச் செயற்படும் பயங்கரவாத அமைப்புக்களே இந்தச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்படும். சட்டத்தில் உள்ள விதிகளுக்கு அமைவாகச் செயற்படும் அமைப்புக்களுக்கு பாதிப்பு இராது. அவை இந்தச் சட்டத்துக்குள் உள்ளடக்கப்படமாட்டா" என்றார் அவர். (உ-3)

### யாழ்.பல்கலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைகின்றோம்.

இன்று எம் தேசத்ததின், காலத்தின் தேவையாக உலகத் தமிழர்கள் அனைவருமே ஒரே குரலுடன் கைகோர்த்து நிற்க வேண்டிய தேவையை, அதன் முக்கியத்துவத்தை, உணர்ந்த நாம், யாழ்.பல்கலைக்கழகத்தில் "தமிழ் மக்களின் அபிலாசையை - பொங்கு தமிழாக மக்களுடன் கரங்களை இறுகப் பற்றி நின்று, பெரும் நிகழ்வாக, மக்கள் எழுச்சியைப் பறைசாற்ற விளைந்தோம். ஆனால் திறந்த வெளிச் சிறைச்சாலையினுள் அடைக்கப்பட்டுள்ள நிலைமையில் எமது இலக்கை எட்டமுடியாத நிலையிலும் மக்களின் அடிமன ஆசைகளை நாங்கள் சுமந்து பல்கலைக்கழகம் என்ற ஆத்ம அறிவுக் களத்தில் நின்று சர்வதேச சமூகத்திற்குப் பறைசாற்றினோம்.

அன்று எழுந்து கொண்ட உணர்வலையும் அதிர்வும் ஓயாமல் இருப்பதுடன், அது மீண்டும் பொங்கு தமிழாக கிழக்கு மண்ணிலும் பிரவாகம் பெற்றதையிட்டுப் பெரும் மகிழ்வடைவதோடு, எமது ஆதரவையும் ஆத்ம பலத்தையும் வழங்கி நிற்கின்றோம்.

அதேவேளை எமது உணர்வுகளின் உயிர்ப்பூட்டலுடன் இன்றும் பல்கலைக்கழகக் காற்று வெளியில் உங்கள் உணர்வுக் கரங்களை இறுகப் பற்றிக்கொண்டு - ஒளிச் சுடர்கள் ஏந்தி எமது உணர்வின் ஊற்றெடுப்புக்களைப் பிரவாகம் பெறச் செய்கின்றோம் - என்றுள்ளது.

(உ-3-7-6-5-ரி)

### 10லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக இருந்துள்ளது என்றும்-

அதன் பயங்கரவாதச் செயல்களுக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டுமானால் பிரிட்டன் அந்த அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனஞ் செய்ய வேண்டும் என்றும் -

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

### மீனவர் பலி

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் மீனவர் ஒருவா உயிரிழந்தார்; மீன்படிப்படகு ஒன்று பலத்த சேதமடைந்தது.

### தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்படும் சட்டத்தினால் தீவிரவாத அமைப்புக்கள் எதிர் கொள்ளக்கூடிய பாதிப்புக்கள் குறித்து அவர் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் விளக்கிக் கூறினார்.

தடுப்புச் சட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரிவுகள் குறித்தும் அவர் அங்கு விளக்கிக் கூறினார்.

இந்தச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்படும் பிறநாட்டு இயக்கங்கள் தொடர்பான விவரங்களை உள்துறை அமைச்சர் இப்போதைக்கு வெளியிடமாட்டார் என்று லண்டன் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

### இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படிக்கைப்படி அந்த உடன்படிக்கை ஏற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சர்வதேச கண்காணிப்புக் குழு தொடர்பாகவே இந்தியா நிபந்தனை விதித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கண்காணிப்புக் குழுவில் பிரிட்டனோ, ஜப்பானோ இடம்பெறக் கூடாது என்று இந்தியா நோர்வேக்குத் தெரிவித்துள்ளது.

நோர்வேத் தரப்பு இந்தியாவின் இந்த வேண்டுகோள் தொடர்பாக இலங்கையிடம் பிரஸ்தாபித்துள்ளது.

இதைத் தொடர்ந்து இலங்கை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரிடம் இது விடயமாக விளக்கம் கோரியுள்ளதாகவும் -

டில்லி அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு பதில் அளிப்பதாக அவர் இலங்கையிடம் தெரிவித்துள்ளதாகவும் - கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசு எழுத்து மூலம் வழங்கியுள்ள செய்தி ஒன்றை எடுத்துக் கொண்டு இந்தியத் தூதர் காந்தி டில்லி சென்றுள்ளதாகவும் -

அங்கு அவர் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் தற்போது 'சமாதானம் என்றாலும் போர்' என்ற நிலையிலேயே இருக்கிறது. உளப்பூர்வமான சமாதானத்துக்கு விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றார்கள். இந்த நிலையில் அரசு பேச்சுவார்த்தைக்கு வந்தே தீர வேண்டும். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் அவர்களது வழியில் கிடைக்காத காரணத்தினாலேயே பிரச்சினைகள் விரிவடைந்தன. கடந்த கால சமாதான முயற்சிகளிலும், பேச்சுவார்த்தைகளிலும் தொடர்ச்சியாகத் தமிழ் மக்களே ஏமாற்றப்பட்டு வந்துள்ளார்கள்.

வவுனியாவில் சிங்கள உதவி அரசாங்கப் பிரிவு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்று அந்தந்த இன மக்கள் வாழுகின்ற பிரதேசங்கள் பிரிவுகளாக இருக்கின்றன இது போலவே ஸ்ரீலங்காவின் புராதன தமிழ் பெயர் ஈழம். தமிழ் மக்கள் காலங்காலமாக வாழுகின்ற பிரதேசங்கள் தமிழீழம் எனப்படுகின்றன. இப்பகுதிகளில் தமிழ் மக்கள் சுதந்திரத்தோடும் சுயாட்சி உரிமையோடும் வாழவே விரும்புகிறார்கள். எனவே விடுதலைப் புலிகளின் சமாதான நல்லெண்ண நோக்கத்தைத் தென்பகுதி மக்களுக்கு தாங்கள் எடுத்துக் கூற வேண்டும் எனப் புலிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை காணாமற்போன படையினர் தொடர்பாக பௌத்த குருமார் வினா எழுப்பிய போது தமது பாதுகாப்பில் உள்ள படையினர் தொடர்பான விவரங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினூடாக தாங்கள் அனுப்பி வைப்பதாகவும் புலிகள் தெரிவித்தனர்.

வடபகுதி முஸ்லிம் மக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்தும் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

காணாமல் போன படையினரின் நலன்காக்கும் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடுக்கோவிலுக்கான தமது விஜயத்தை முடித்துக் கொண்டு சர்வமதக் குருமார் குழுவினர் நேற்று மாலையே கொழும்பு திரும்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததாக மடுக்கோவில் வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன.(உ-7)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
★ ரிஷி
★ தாலி காத்த காளியம்மன்
★ சிங்கத்தமிழன்
பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம். பிரதி 275/-
அஸ்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/15388)

எமது இன்றைய CD வெளியீடுகள்
★ ரிஷி
★ சிங்கத்தமிழன்
★ தாலி காத்த காளியம்மன்
வீடியோ ஆனந்த்
மானிப்பாய். T.P. - 2889
(84385)

பரீட்சை வினாத்தாள்கள் தேவையா?
தரம் 4 முதல் O/L வரை
சகல பாடங்களுக்குமான
ஜனவரி, பெப்ரவரி
வினாத்தாள்கள் பெறலாம்.
ACADEMY EXAMINATION UNIT
SCIENCE ACADEMY
NALLUR, JAFFNA.
(84391)

மாணவ மாணவிகளே!
நாளை 8 மணிக்கு
G.C.E O/L 2001, Gr. 10
தூர - நேர வரைபுகள்
இ.பெ. - நேர வரைபுகள்
கதி - நேர வரைபுகள்
வேக - நேர வரைபுகள்
ஆர்மு. - நேர வரைபுகள்
பற்றி
இலகுவாக இலவசமாக அறிய
வாருங்கள் (84201)
DMI யாழ்.நகர்.

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
சரத்குமாரின்
★ ரிஷி
பிரபுவின்
★ தாலி காத்த காளியம்மன்
சாய்குமாரின்
★ சிங்கத்தமிழன்
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/15382)

இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமார், மீனா
★ ரிஷி
பிரபு, சங்கவி
★ தாலி காத்த காளியம்மன்
பிரதிகள் உடன் பெறலாம்.
விஷ்ணு வீடியோ
K.K.S. Rd., கோண்டாவில்.
(C/15387)


## மரண அறிவித்தல்

### செல்லம் கந்தசாமி

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பெடியன் கனகர் செல்லம் அவர்களின் அன்பு மகனான கந்தசாமி அவர்கள் நேற்று (19-02-2001) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சற்குணவதியின் அன்புக்கணவரும், மங்கையர்க்கரசியின் தம்பியும், வானதி, வர்ணன், கமல், கஜேந்திரன், கஜேந்தினி, சோபா, சோபிகா, ஆகியோரின் தந்தையும் சுசீலா, ஆனந்தி, அன்ரனி(ஈசன்), பிரதீப்குமார் ஆகியோரின் மாமனாரும் ஜனகன், துவாரகன், லக்சன், கயல்விழி, பிரசாந்தன், ஆசா, கம்சிகா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஊர்காவற்றுறையில் இடம்பெறவிருக்கின்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* (C/15390) தகவல்: வர்ணன் (திவாகர் - மகன்.)


மலிவு விலையில் கலண்டர்கள்
லீலா 2001
லீலா பஞ்சாங்கச் சித்திரக் கலண்டர் ரூபா 90 /-
லீலா மாதக் கலண்டர் ரூபா 22 /-
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/15380)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20. 02. 2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.